E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 மார்ச் 4 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 54 | Saturday 04, March, 2023 | 13 பக்கங்கள்

## நாட்டில் தங்க விலையில் தொடர் வீழ்ச்சி நிலை!

### 24 கரட் பவுண் 1,83,500 ரூபாவாக பதிவு



தங்கத்தின் விலை உலக சந்தையில் நாளுக்கு நாள் ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வரும் நிலையில், நேற்று முன்தினம் (02) ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின் படி 650,185.00 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

06

# பாராளுமன்றத் தேர்தல் மூலமாக மட்டுமே அரசை மாற்றலாம்

## வீதிகளில் இறங்கிப் போராடுவது அதற்கு மாற்று வழி அல்ல

### திருகோணமலை விமானப்படை விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

### நாட்டின் பொருளாதாரத்திற்கு விரைவில் சாதகமான முடிவு காணப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டு மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத் தேர்தல் மூலம் மாத்திரமே அரசாங்கத்தை மாற்ற முடியும் என்றும் வீதிகளில் இறங்கிப் போராடுவது அதற்கு மாற்றுவழி அல்ல எனவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் விரைவில் சாதகமான முடிவுகள் கிடைக்கவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார வீழ்ச்சியின் ஊடாகவும் நாடுகள் அராஜக நிலைக்கு மாறும் என்றும் எனவே, ஒரு நாட்டின் அரசியலமைப்பைப் போன்று, பொருளாதாரத்தையும் பாதுகாக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

திருகோணமலை விமானப்படைத் தளத்தில் நேற்று (03) நடைபெற்ற விமானப்படைக்குத் தெரிவான கெடட் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை விமானப்படைத் தளத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதிக்கு விமானப்படை வீரர்களின் மரியாதை அணிவகுப்புடன் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

37 அதிகாரிகளும் மூன்று பெண் அதிகாரிகளும் பயிற்சி பெற்று வெளியேறியதுடன், 06

நெருக்கடிகளுக்கு மத்தியிலும் விவசாயிகளுக்கு உரம்;

## ஜனாதிபதிக்கு பொலன்னறுவை விவசாயிகள் பாராட்டு

### உரிய நேரத்தில் வழங்கியமைக்கு நன்றியும் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலவும் நிலையிலும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை உரிய காலத்தில் பெற்றுக்கொடுத்துள்ளமைக்காக பொலன்னறுவை விவசாயிகள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தனர்.

பொலன்னறுவை, மின்னேரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (02) நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலன்னறுவை மாவட்ட விவசாயிகளையும் இதன்போது சந்தித்தார். 06

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை: விடைத்தாள் திருத்தும் அதிகாரிகளுக்கு ரூ.2,000 கொடுப்பனவு வழங்க அனுமதி

### பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு 2,000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக, பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று (02) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள பரீட்சைகள் திணைக்களம், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்த நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகள் ஒன்லைன் மூலமாக விண்ணப்பிப்பதற்கான காலம் எதிர்வரும் 8ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் நடவடிக்கையின்போது, திருத்த வேலைகளில் ஈடுபடும் அதிகாரிகள் மத்தியில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்ட நிலையில், அதற்குத் தீர்வு காணப்பட்டு 06

## பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தும் மாணவர்களுக்கு தொழிற்கல்வி!

### கல்வி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும் –சுசில் பிரேமஜயந்த



பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தும் மாணவர்களுக்கு தொழிற்கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

“பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தும் 06

அவசர திருத்தப்பணிகள் காரணமாக

## கொழும்பில் இன்று 24 மணிநேர நீர்வெட்டு

### நீர்வழங்கல் சபை அறிவிப்பு



அவசர திருத்தப்பணிகள் காரணமாக கொழும்பின் பல பகுதிகளுக்கு 24 மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தடைப்படுமென, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

இதனால், கொழும்பு 01, 02, 03, 04 மற்றும் கொழும்பு 07, 08, 09, 10, 11 ஆகிய இடங்களில் 06

## சீனா சுற்றுலாப் பயணிகள் 5 இலட்சம் பேர் இவ்வருடத்தில் இலங்கைக்கு வருவர்

### வீதிகளை மூடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை நிறுத்துங்கள்

### அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

அராஜகத்தைக் கைவிட்டு ஒரு வருடத்துக்கு சுதந்திரமாக சுவாசிப்பதற்கு இடமளித்து அரசியல் செய்யுமாறு தாம் அனைத்து அரசியல் கட்சிகளையும் கேட்டுக்கொள்வதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

'நீங்கள் ஆர்ப்பாட்டம் நடத்துங்கள், எனினும் வீதிகள் மூடப்படும் போது நாடு வீழ்ச்சியுறுவதைத் தடுக்க முடியாது போகும் என்பதை ஆர்ப்பாட்டக்காரர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்' என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



சீனாவிலிருந்து கொரோனாவுக்குப் பின்னர் மீண்டும் சுற்றுலாப் பயணிகள் வருகை தர ஆரம்பித்துள்ள நிலையில், முதற்கட்டமாக 120 பேர் கொண்ட குழுவினர் வருகை தந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர், 06

## இலங்கையருக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்பு வசதி

### நிர்மாணத்துறையில் ஆண்களுக்கு சந்தர்ப்பம்



ஜப்பானில் நிர்மாணத் துறையில் இலங்கை ஆண்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஆர்வமுள்ளவர்கள் இம்மாதம் 10ஆம் திகதி மாலை 4.30 மணிக்குள் அல்லது அதற்கு முன்னராக, தங்களது விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை 06

## இலங்கையில் வரி சீர்திருத்தம் தொடர்பில் IMF பாராட்டு!

### கூட்டறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டு

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வரி சீர்திருத்தத்துக்கு சர்வதேச நாணய நிதியத்தால் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமுல்படுத்தப்பட்ட வரி அதிகரிப்பு பொதுமக்களால் கடுமையாக எதிர்க்கப்பட்ட போதிலும், கடனாளிகளின் நம்பிக்கையை மீளப் பெறுவதற்கு இலங்கையில் வரிச் சீர்திருத்தங்கள் அவசியமானது என, அவர்கள் தெரிவித்துள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை அலுவலகத்தின், சிரேஷ்ட பிரதம செயற்பாட்டு அதிகாரி பீட்டர் ப்ரூவர் மற்றும் அலுவலகத் தலைவர் மசாஹிரோ நோசாக்கி ஆகியோர் கூட்டறிக்கையில் 06

உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதி

## நிறுத்திவைப்பதை தடுத்து உயர்நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை நிறுத்திவைப்பதைத் தடுத்து உயர் நீதிமன்றம் நிதியமைச்சர் மற்றும் திறைசேரியின் செயலாளருக்கும் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

அதேவேளை, வாக்காளர் அட்டை அச்சுப்பதிப்புக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ள நிதியை தடுத்து வைத்தலிலிருந்து நீக்குமாறும் உச்ச நீதிமன்றம் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனு மீதான விசாரணை நேற்று உச்சநீதிமன்றத்தில் இடம்பெற்றுள்ள போதே ப்ரீதி பத்மன் சூரசேன, ஜனக டி சில்வா மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய நீதிபதிகள் உள்ளடங்கிய நீதிபதிகள் குழாம் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளது.

## எஜமானின் மறைவுக்கு கண்ணீர் விட்டழுத யானை!

### தம்புள்ளை, கண்டலம பகுதியில் சம்பவம்



மனிதர்களை மனிதர்களாக மதிக்கத் தவறும் நிலையில், யானை ஒன்றின் செயற்பாடு பலரைக் கண்கலங்க வைத்துள்ளது. 06

## பற்றாக்குறையாகவுள்ள 37 வகை மருந்துகளை வழங்க WHO இணக்கம்

### சுகாதார அமைச்சர் கெஹலியவுடன் சந்திப்பில் தெரிவிப்பு

நாட்டில் பற்றாக்குறையாகவுள்ள 37 வகையான மருந்துகளை உடனடியாக வழங்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் ஒப்புக்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, இது தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த மாநாட்டுடன் இணைந்து இந்தக் கலந்துரையாடல், ஜெனீவாவில் நடைபெற்றதாக, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாட்டிலுள்ள மருந்துகளுக்கான பற்றாக்குறை மற்றும் சுகாதார 06

வடக்கின் நுழைவாயில்

## 'சர்வதேச வர்த்தக சந்தை' 13ஆவது தடவையாக யாழில் ஆரம்பம்



யாழ். விசேட நிருபர்

'வடக்கின் நுழைவாயில்...' எனும் தொனிப்பொருளின் கீழ் சர்வதேச வர்த்தகச் சந்தையானது 13ஆவது தடவையாக நேற்று (03) யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில், இந்த வர்த்தகச் சந்தையானது, நாளை (05) வரை மூன்று தினங்களுக்கு நடைபெற்றுள்ளது. 06

இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை தாண்டும்

## இந்திய மீனவரைக் கண்டு பயங்கொள்ள வேண்டாம்

### பிடித்து கடற்படையினரிடம் ஒப்படையுங்கள் –டக்ளஸ்



வடபகுதிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்தால், அவர்களை எமது மீனவர்கள் பிடித்து கடற்படையினரிடமோ அல்லது பொலிஸாரிடமோ ஒப்படைக்கலாம் என, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் வைத்துக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன், “நான் ஏற்கெனவே எமது மீனவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் யாரும் பயப்பட வேண்டிய தேவையில்லை. 06

## மக்களுக்கு அவசரமான தேவை உணவுதான்!

### தேர்தல் அல்ல என்கிறார் ராஜித MP



சுகாதார அமைச்சர் பதவியை ஏற்கத் தயார் என, களுத்துறை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"எனக்கு சுகாதார அமைச்சர் பதவி கிடைத்தால், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள துரதிஷ்டமான சூழ்நிலையிலிருந்து மீட்பதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.

இந்த நேரத்தில் மக்களுக்குத் தேவை தேர்தல் அல்ல, உணவுதான்" என்றார். 06

## அதிவேக நெடுஞ்சாலையில் சட்டவிரோத பஸ் சேவை!

### 04 பஸ்கள் பொலிஸாரால் கைப்பற்றல்

லோரன்ஸ் செல்வநாயகம்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்துப் பொலிஸாரினால் நேற்று (03) அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோதமாகப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட நான்கு பஸ் வண்டிகளை கைப்பற்றியுள்ளதாக, அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவை அதிவேக நெடுஞ்சாலை வெளிச் செல்லும் பகுதிக்கு அண்மித்த பிரதேசத்தில் மேல்மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் இணைந்து மேற்கொண்ட 06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைன்–ரஷ்யா போர் குறித்து ஜி20 மாநாடு சமரசமின்றி முடிவு

உக்ரைன் போர் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாடு இன்றி ஜி20 கூட்டம் நிறைவடைந்துள்ளது. போரை நிறுத்துவதற்கான ரஷ்யா மீதான கோரிக்கைக்கு ரஷ்யா மறுத்ததுடன் சீனாவும் அந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

கடந்த வியாழனன்று (02) புதுடில்லியில் நடைபெற்ற ஜி20 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில், ரஷ்யா முழுமையாகவும் நிபந்தனையற்ற வகையிலும் உக்ரைனில் இருந்து வாபஸ் பெற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் அதற்கு ரஷ்யாவுடன் சீனாவும் மறுப்பை வெளியிட்டது.

வெவ்வேறு தரப்புகள் மாறுபட்ட நிலைப்பாட்டை பெற்றிருந்த நிலையில் சமரசம் எட்டுவதில் வேறுபாடு இருந்தது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமன்யம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

எனினும் பன்முகத்தன்மையை வலுப்படுத்தல், உணவு மற்றும் வலுசக்தி பாதுகாப்பு மேம்பாடு, காலநிலை மாற்றம், பாலின பிரச்சினைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு போன்ற குறைந்த வளர்ச்சி அடைந்த நாடுகளின் கவலைக்குக் காரணமான பெரும்பாலான விவகாரங்களில் உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகளின் குழுக்களில் ஒன்றான ஜி20 உறுப்பினர்கள் இடையில் இணக்கம் எட்டப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஒன்றுகூடிய வெளியுறவு அமைச்சர்கள் இடையே வீடியோ தொழில்நுட்பத்தில் பேசிய, இந்திய பிரதமர்



நரேந்திர மோடி, உணவு மற்றும் வலுசக்தி பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் கடன் விவகாரத்தில் எட்ட முடியுமான உடன்படிக்கைகளை சீர்குலைக்க தற்போதைய பதற்ற சூழலுக்கு இடம்விடக் கூடாது என்று வலியுறுத்தினார்.

இதில் பங்கேற்ற ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கி லவ்ரோவுக்கு எதிர்ப்பை வெளியிட்டு ஜெர்மனி வெளியுறவு அமைச்சர் அன்னலேனா பேர்பொக் பேசினார். “லவ்ரோவ் அவர்களே, போரை நிறுத்துங்கள், எமது சர்வதேச ஒழுங்கை மீறுவதை நிறுத்துங்கள், உக்ரைன் நகரங்கள் மற்றும் பொதுமக்கள் மீது குண்டு போடுவதை நிறுத்துங்கள்” என்றார்.

இதற்கு பதிலளித்து பேசிய லவ்ரொவ், உக்ரைனுக்கு பல ஆண்டுகளாக ஆயுதங்களை கொடுத்து வரும் மேற்கத்திய நாடுகள் கபட நாடகம் ஆடுகின்றன என்று சாடினார்.

எனினும் இந்தியா சென்றிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் வலுசக்தி மற்றும் உணவு பாதுகாப்பை வலுப்படுத்துவதிலேயே அதிக காலத்தை செலவிட்டு வருவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும் உக்ரைனில் ரஷ்யாவின் போருக்கு சவால் விடுக்காமல் இருக்க முடியாது என்று பிளிங்கன் இந்த மாநாட்டில் சுட்டிக்காட்டினார்.

இதில் பிளிங்கன், லவ்ரோவை குறுகிய நேரம் சந்தித்துப் பேசினார். இது ரஷ்ய மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் கடந்த பல மாதங்களில் இடம்பெற்ற உயர்மட்ட சந்திப்பாக இருந்தது. எனினும் இந்த சந்திப்பு 10 நிமிடங்களுக்கு குறைவாகவே இருந்தது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 2035இல் உலகில் பாதி மக்களின் எடை அதிகம்

உலக மக்களில் பாதிக்கும் அதிகமானோர் 2035ஆம் ஆண்டுக்குள் உடற்பருமன் அல்லது கூடுதல் எடை மிக்கவர்களாக இருப்பார்கள் என்று அறிக்கை ஒன்று குறிப்பிட்டுள்ளது. இது 4 பில்லியனுக்கும் அதிகமானோருக்குச் சமம்.



பிள்ளைகளிடையே உடற்பருமனாக உள்ளோர் வீதம் அதிகரிப்பதாக உலக உடற்பருமன் சம்மேளனம் குறிப்பிட்டது. ஏழை நாடுகளிலும் அந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நிலைமை கடுமையாவதற்குள் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சம்மேளனம் வலியுறுத்தியது.

உடற்பருமனால் ஏற்படும் உடல்நலப் பிரச்சினைகள் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். 2035க்குள் ஆண்டுதோறும் 4 டிரில்லியன் டொலர் இழப்பு நேரிடலாம்.

வரும் ஆண்டுகளில் ஆசியா, ஆபிரிக்கா ஆகியவற்றிலுள்ள குறைந்த, நடுத்தர வருமான நாடுகளில், உடற்பருமன் வீதம் கணிசமாக அதிகரிக்கலாம் என்று கூறப்படுகிறது.

2020ஆம் ஆண்டு நிலவரப்படி 2.6 பில்லியன் பேர் உடற்பருமன் மிக்கவர்களாக உள்ளனர். அது உலக மக்கள்தொகையில் 38 வீதமாகும்.

## வனுவாட்டுவில் அடுத்தடுத்து பூகம்பம், சூறாவளி பாதிப்பு

பசுபிக் பிராந்திய நாடான வனுவாட்டுவில் கடந்த சில தினங்களுக்குள் பூகம்பம் மற்றும் சூறாவளி தாக்கியதை அடுத்து நேற்று (03) அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.



ஜூடி சூறாவளியால் பாதிக்கப்பட்ட மின்சார கட்டமைப்பு மற்றும் வீதிகள் சீராக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை இரட்டை பூகம்பம் தாக்கியதோடு மற்றொரு சூறாவளி அந்த நாட்டை நெருங்கியுள்ளது.


“வனுவாட்டு இயற்கை அனர்த்தங்களுக்கு பழக்கப்பட்டபோதும் அடுத்தடுத்து சூறாவளி வருவது இது முதல் முறை” என்று யுனிசெப்பின் எரிக் டுர்பெயர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

முதலில் தாக்கிய ஜூடி சூறாவளியால் உயிர்ச்சேதங்கள் ஏற்படாதபோதும் கூரையில் தூக்கி எறியப்பட்டு, வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

தலைநகர் போர்ட் விலாவில் உள்ள அவசர முகாம்களில் நூற்றுக்கணக்கானோர் அடைக்கலம் பெற்றுள்ளனர். தலைநகரில் இரு நாட்களாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அங்கு 6.5 மற்றும் 5.4 ரிக்டர் அளவில் இரு பூகம்பங்கள் பதிவாயின.

## மூளையை உண்ணும் அமீபா தொற்றால் ஒருவர் உயிரிழப்பு

மிக அரிதான மூளையை உண்ணும் அமீபாவால் பாதிக்கப்பட்டு அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.



தனது நாசியை குழாய் நீரினால் கழுவியதன் மூலம் இந்தத் தொற்றினால் அவர் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என்று தென்மேற்கு புளோரிடாவில் உள்ள சார்லட் கௌண்டியைச் சேர்ந்த சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

நக்லேரியா பவுலேரியா என்ற இந்தத் தொற்று மூக்கு வழியாக மனிதனின் மூளைக்குள் நுழைகிறது. இந்தத் தொற்று எப்போதும் உயிராபத்துக் கொண்டது என்று அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி பலதரப்பட்ட அரச நிறுவனங்களும் தொடர் விசாரணை நடத்தி வருவதாக மாநில சுகாதார நிறுவன பேச்சாளர் ஜே வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த அமீபா தொற்று வழக்கமாக நீச்சல் தடாகங்கள், ஏரிகள் மற்றும் குளங்கள் போன்ற வெதுவெதுப்பான நன்னீரிலேயே உள்ளன.

## ஆப்கானின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாகும் சீனா



ஆப்கானிஸ்தானின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாக சீனா மாறும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவின் சுங்கத் தரவுகளின் படி, 2022 ஆண்டு டிசம்பர் மாதம் ஆப்கானில் இருந்து 9.09 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்துள்ள சீனா, 59 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருட்களை ஆப்கானுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இதன் ஊடாக சீனாவுக்கு சாதகமான வர்த்தக சமநிலை ஏற்பட்டுள்ளது.


இத்தரவுகளின் படி, இவ்வருடம் இரு நாடுகளுக்கிடையிலான இருபக்க வர்த்தகம் 816 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமையும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பட்டுப் பாதை சுருக்க அறிக்கையில், ஆப்கானிஸ்தானுடன் சீனாவின் வர்த்தக நடவடிக்கைகள் வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றன. இதற்கு பட்டுப்பாதை முன்முயற்சிகள் பெரிதும் உதவியுள்ளன. அதனால் பாகிஸ்தானுக்கு அடுத்தப்படியாக ஆப்கானிஸ்தானுடன் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் இரண்டாவது பெரிய நாடாக சீனா இவ்வருடம் மாறும் என்று கூறப்பட்டள்ளது.

## கிசா பிரமிட்டுக்குள் மறைக்கப்பட்ட 'நடைக்கூடம்' ஒன்று கண்டுபிடிப்பு

கிசாவின் பெரிய பிரமிட்டின் பிரதான நுழைவாயிலுக்கு மேலால் மறைக்கப்பட்ட உள்ளக நடைக்கூடம் ஒன்று இருப்பதை எகிப்து தொல்பொருள் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

உள்ளே செலுத்தப்பட்டு பெறப்பட்ட என்டோஸ்கோப் வீடியோவில் உள்ளே 9 மீற்றர் நீளமான மற்றும் 2.1 மீற்றர் அகலமான நடைக்கூடம் ஒன்று இருப்பது தெரியவந்துள்ளது. இது நுழைவாயிலைச் சுற்றியுள்ள பிரமிட்டின் எடையை மறுபகிர்வு செய்வதற்காக உருவாக்கப்பட்டதாகவோ அல்லது இன்னும் கண்டுபிடிக்கப்படாத மற்றொரு அறையாகவோ இருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



பிரமிட்டுக்குள் அடர்த்தி மாற்றங்களை மியூவான் துகள்கள் ஊடுருவியது எவ்வாறு என்று ஆய்வு செய்ததன் மூலம் ஸ்கேன்பிரமீட்ஸ் திட்டத்தில் இருந்து விஞ்ஞானிகள் குழு ஒன்றால் கண்டறிய முடிந்துள்ளது. இந்தத் துகள்கள் அண்டக் கதிர்களின் துணை அம்சங்கள் என்பதோடு கற்களால் அவைகளை பகுதி அளவே உறிஞ்ச முடியும்.

செவ்ரான் கல் அமைப்பு ஒன்று இருக்கும் பகுதியில் பிரதான நுழைவாயிலுக்கு சுமார் 7 மீற்றர் மேலால் வடக்கு முகப்புக்குப் பின்னால் வெற்றி இடைவெளி ஒன்று இருப்பது கண்ணுக்கு புலப்படாதவற்றை கண்டறியும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ராடார் மற்றும் அல்ட்ரா சௌன்ட் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேலும் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செவ்ரான்கள் அமைக்கப்பட்ட கற்களின் இணைப்புகளுக்கு இடையால் 6 மி.மீ அகலமான என்டோஸ்கோப் கருவி செலுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புதிய நடைக்கூடத்தின் படங்கள் கடந்த வியாழக்கிழமை பிரமிட்டுக்கு அருகில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் காண்பிக்கப்பட்டுள்ளது. அதில் வளைந்த கூரை மற்றும் வெட்டப்பட்ட கற்களாலான சுவர்களுடன் வெற்று நடைக்கூடம் ஒன்று தெரிகிறது.

“நாம் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்வதன் மூலம், அதற்குள் என்ன இருக்கிறது அல்லது வெறுமனே ஒரு முடிவைக் கொண்ட நடைக்கூடமா என்பதை கண்டறிய முடியும்” என்று எகிப்து தொல்பொருட்களின் உச்ச சபைத் தலைவர் முஸ்தபா வாசிரி தெரிவித்துள்ளார். கி.மு 260 தொடக்கம் கி.மு 258 வரை ஆட்சியில் இருந்த கூபு அல்லது சேப்ஸ் பாரோவினால் நான்காவது வம்சத்தின்போது கிசா பீடபூமியில் கட்டப்பட்ட பெரிய பிரமிட் 146 மீற்றர் உயரமானதாகும்.

உலகின் மிகப்பெரியதும் மிகப் பழையதுமான சின்னமாக உள்ள இந்த பிரமிட் எவ்வாறு கட்டப்பட்டது என்பது பற்றி தொடர்ந்தும் மர்மம் நீடிக்கிறது.

இந்நிலையில் இந்த நடைக்கூடம் மிகப்பெரிய கண்டுபிடிப்பு என்று எகிப்து அகழ்வாராய்ச்சியாளர் சாஹி ஹவ்வாஸ் வர்ணித்துள்ளார். இது பிரமிட்டுக்குள் இன்னும் இருக்கின்ற கூபு மன்னரின் அடக்கஸ்தலத்திற்கு இட்டுச் செல்ல உதவக்கூடும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

## பலஸ்தீன சிறுவன் இஸ்ரேல் படையினரால் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினரால் 15 வயது பலஸ்தீன சிறுவன் ஒருவன் சுட்டுக்கொல்லப்பட்டதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை (02) பின்னேரம் அஸ்ஸூம் நகருக்குள் இஸ்ரேலிய இராணுவ வாகனம் ஒன்று நுழைந்தபோது இளைஞர்கள் அதன்மீது கல் எறிந்ததற்கு பதிலடியாக இஸ்ரேலிய படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று அந்த மேற்குக் கரை நகர மேயர் அஹமது எனாயா தெரிவித்துள்ளார்.

“ஆக்கிரமிப்பு (இஸ்ரேல்) படையினரால் அந்த சிறுவனின் பின்புறம் சூடு நடத்தப்பட்ட நிலையில் அவன் கொல்லப்பட்டான்” என்று பலஸ்தீன சுகாதார அமைச்சர் முஹமது நிதால் சலிம் தெரிவித்துள்ளார்.

இதன்போது குழந்தை உட்பட இருவர் காயமடைந்திருப்பதோடு குழந்தையின் நிலை மோசமாக இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.


அஸ்ஸூமுக்கு அருகால் கடந்து செல்லும் இஸ்ரேலிய வாகனங்கள் மீது பட்டாசுகளை வீசுவது பற்றி தேடுதலை நடத்தி வந்த இஸ்ரேலிய படையினர் மீது வெடிபொருட்களை வீசிய சந்தேக நபர்கள் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினர் நாளாந்தம் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் மேற்கொண்டு வரும் நிலையில் பலஸ்தீனர்கள் பலரும் கொல்லப்பட்டுள்ள சூழலில் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

துருக்கி பூகம்ப இடிபாடு

## 23 நாட்களுக்குப் பின் நாய் உயிருடன் மீட்பு

துருக்கியில் பூகம்ப இடிபாடுகளுக்கு இடையே 23 நாட்களாக உணவு, தண்ணீரின்றி தவித்த நாய் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.



ஹட்டாய் மாகாணத்தில், அடுக்குமாடிக் குடியிருப்பின் இடிபாடு குவியல்களிலிருந்து தாங்கள் வளர்த்த நாய் குரைக்கும் சத்தம் கேட்பதாக மீட்பு குழுவினரிடம் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இடிபாடுகளுக்கு இடையே இருந்த சிறிய இடைவெளி வழியாக சென்ற மீட்புக் குழுவினர், சைபீரியன் ஹஸ்கி இன நாயை பத்திரமாக மீட்டுவந்தனர்.

கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி இடம்பெற்ற பூகம்பத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக ஹட்டாய் மாகாணம் உள்ளது. தெற்கு துருக்கி மற்றும் வடக்கு சிரியாவில் ஏற்பட்ட இந்த பயங்கர பூகம்பத்தில் 50,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மார்ச் 4 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**
சுபஹ் - 05.08
லுஹர் - 12.24
அஸர் - 03.42
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் மாசி 20
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# வருமானவரி செலுத்தாதோரை இனங்காண விசேட நடவடிக்கை

**வருமானவரி திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்து - நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமது வருமானத்தை வெளியிடாமல் வரி செலுத்துவதிலிருந்து தப்பித்து வரும் சில தொழிற்றுறைகளில் ஈடுபடும் தரப்பினரை இனங்காண்பதற்காக துரித நடவடிக்கையொன்றை முன்னெடுக்கப் போவதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அது தொடர்பில் விரைவான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர், தேசிய வருமான வரி ஆணையாளர் நாயகத்துக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தின் வருமானம் பெரும் பிரச்சினைக்குரியதாகியுள்ள இத்தருணத்தில், வருமானத்தை அதிகரித்துக்கொள்வது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. வரி அறவீட்டின் மூலம் அரச வருமானத்தை திரட்டிக்கொள்வதோடு, அதற்குச் சமமாக வரிசெலுத்தத் தவறியுள்ள தரப்பினரை இனங்காண்பதற்கும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகுமென்றும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.



தேசிய வருமான வரித் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கும் இடையில் நிதி அமைச்சில் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது. இதன்போதே, வரி அறவீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக வருமான வரி திணைக்கள அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வரி வருமானத்தை திரட்டும் நடவடிக்கைகளில் எதிர்கொள்ள நேர்ந்துள்ள சிக்கல்கள் தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தையின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அதிகாரிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புதல் உள்ளிட்ட விடயங்களும் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், வரி செலுத்தத் தவறியுள்ளோர் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வருமான வரி திணைக்கள மட்டத்தில் விரைவான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய முறைமையொன்றை தயாரிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தவக்கால சிந்தனை



## " உங்கள் பகைவரையும் அன்பு செய்யுங்கள்"

**(சனி – மத்தேயு 5: 43 – 48)**

தவக்காலத்தில் முதலாம் வாரத்தில் பயணிக்கின்றோம். அன்பின் மகத்துவத்தை இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

எமக்கு அடுத்திருப்பவருக்கு அன்பு காட்டுவதும் எமது பகைவருக்கு வெறுப்பினைக் காட்டுவதும் பழைய ஏற்பாட்டு இலக்கியத்தின் செய்தியாக அமைந்திட " உங்கள் பகைவரையும் அன்பு செய்யுங்கள்" என்பதை இயேசுவின் புதிய செய்தியாக இன்றைய நற்செய்தி கோடிட்டுக் காட்டுகின்றது.

கிறிஸ்தவத்தின் அடிநாதம், நிறைவு அனைவரையும் அன்பு செய்வதாகும். ஒரு யூதனுக்கு அடுத்திருப்பவன் இன்னுமொரு சகோதர யூதனே. ஏனைய அனைவரும் புறத்தியார் என்பது அக்காலப் படிப்பினையாகவிருக்க, இயேசு உனக்கு அடுத்திருப்பவன் சகோதர யூதன் மட்டுமல்ல கடவுளால் படைக்கப்பட்ட அனைத்து மாந்தருமே என்கிற நிறைவான விளக்கத்தை இறைவார்த்தைக்குத்தந்து அதனை நிறைவு செய்கிறார்.

இறை தந்தை நல்லோர் மேலும் தீயோர் மேலும் ஒளிவீசச் செய்கிறார். நேர்மையாளர் மீதும் நேர்மையற்றோர் மீதும் மழைபொழியச் செய்கிறார், அதனூடாக கிறிஸ்தவர்களுக்கு பகைவர்கள் என்றும் யாருமே இருக்க முடியாது எனக் கற்பிக்கின்றார்.


அதுமட்டுமல்லாது பகைவர்களை அன்பு செய்யவும், துன்புறுத்துவோருக்காக இறைவேண்டல் செய்யவும் அழைக்கிறார். எனவே இயேசுவைப் பின்பற்றும் நம்பிக்கையாளர்களிடத்தில் அன்பில் பாரபட்சம் இருக்கவே முடியாது. அவரைப்போன்று தம்மை வெறுத்து ஒதுக்கியவர்களையும் சிலுவையில் அன்பு செய்ததுபோன்று அன்பு செய்ய வேண்டும்.

அன்பு ஒன்றே மாந்தர் அனைவரையும் ஒன்றாக இணைக்கும் மந்திரக்கயிறு. அந்த அன்பினால் அனைவரையும் அரவணைத்து ஒற்றுமைப் பயணத்தை இத் தவக்காலத்தில் தொடர்வோம்.

அருட்தந்தை நவாஜி...

# இலங்கையில் நல்லிணக்க முன்னெடுப்பு; தென்னாபிரிக்க அதிகாரிகளுடன் சந்திப்பு

**அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு**



இலங்கையில் அர்த்தமுடைய வகையில் நல்லிணக்க முன்னெடுப்பு, நல்லிணக்கப் பொறிமுறை மற்றும் நம்பகமான உண்மையைத் தேடுவதற்கான வரையறை தொடர்பாக தென்னாபிரிக்காவின் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தியதாக, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

'Raisina உரையாடல் 2023' மீதான தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான அமைச்சர் கலாநிதி நலெடி பண்டோரை (Naledi Pandor) சந்தித்ததில் மகிழ்ச்சியடைவதாகவும், அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்புத் தொடர்பாக தனது பேஸ்புக்கில் அமைச்சர் அலி சப்ரி வெளியிட்ட பதிவிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்புத் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா, ஆடை, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைத்து நடப்பதன் மூலம் தற்போதுள்ள இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு இணங்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

**60,000 முட்டைகள் மறைத்து வைத்த சம்பவம்**

# ஜா–எல பகுதி களஞ்சியசாலைக்கு அதிகாரிகளால் சீல் வைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிகரித்த விலையில் விற்பனை செய்வதற்காக ஜாஎல பகுதியில் 60,000 முட்டைகளை மறைத்து வைத்திருந்த வர்த்தக ஒருவரின் களஞ்சியசாலைக்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் சீல் வைத்துள்ளனர்.

இது தொடர்பான தகவல்களை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்து நீதிமன்றத்தின் தீர்ப்பை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் என்டன் நிஷாந்த அப்புஹாமிக்கு சொந்தமான ஜா எல தன்டுகம பிரதேசத்திலுள்ள முட்டைக் களஞ்சியசாலையே இவ்வாறு சீல் வைக்கப்பட்டுள்ளதாக, அந்த அதிகாரி தெரிவித்தார்.

முட்டையைக் கொள்வனவு செய்யும் போர்வையில் அப்பகுதிக்குச் சென்ற நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் கொழும்பு மாவட்ட சுற்றிவளைப்பு அதிகாரிகளே, இவ்வாறு அந்தக் களஞ்சியசாலைக்கு சீல் வைத்துள்ளனர்.

களஞ்சியசாலையின் உரிமையாளரான என்டன் நிஷாந்த அப்புஹாமியிடம் அந்த அதிகாரிகள், 260 முட்டைகளை கொள்வனவு செய்ய முற்பட்ட போது, சில்லறை விலைக்கு முட்டை விற்பனை செய்யப்பட மாட்டாது என்றும் 10 ஆயிரம் முட்டைகளே தர முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் குழு, மீண்டும் அங்கு சென்று அந்தக் களஞ்சியசாலையை சோதனைக்கு உட்படுத்தியதுடன், களஞ்சியசாலைக்கு சீல் வைத்துள்ளனர்.

களஞ்சியசாலையை சோதனையிடுவதற்கு அதன் உரிமையாளரான என்டன் நிஷாந்த அப்புஹாமி தனது கடுமையான எதிர்ப்பை அதன்போது தெரிவித்தார். அப்போது நிலவிய சுமூகமற்ற நிலை காரணமாக அந்த அதிகாரிகள் ஜாஎல பொலிஸாரை அழைத்து, தமது கடமைக்கு தடை ஏற்படுத்துவதாக முறைப்பாடு செய்தனர்.

# சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு இம்மாத இறுதிக்குள் உறுப்பினர்கள்

**நியமிக்க அரசியலமைப்பு பேரவை திட்டம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை இந்த மாதத்துக்குள் நிறைவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக, அரசியலமைப்பு பேரவை தெரிவித்துள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையிலான தேசிய அரசியலமைப்பு பேரவை, அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கு இணங்க ஆணைக்குழுக்களுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்களை தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அதன்படி, இந்த மாதத்துக்குள் புதிய ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அரசியலமைப்பு பேரவை தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, தேசிய தணிக்கை சேவைகள் ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்களே நியமிக்கப்படவுள்ளதாக, அரசியலமைப்பு பேரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

# காட்டு யானை தாக்கி இருவர் உயிரிழப்பு

அம்பன்பொல மற்றும் எஹெதுவெவ பகுதிகளில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்துள்ளனர்.

அம்பன்பொல பகுதியில் யானையொன்று தாக்கியதில் ஒருவர் நேற்று (03) அதிகாலை உயிரிழந்துள்ளதாக, பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

நிகவலயாய பகுதியில் வசிக்கும் 57 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, எஹெதுவெவ பகுதியில் காட்டு யானையொன்று தாக்கியதில் மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார். கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

06

**உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2023**

# தேர்தல் நடைபெறும் திகதி அடுத்த வாரம் வெளியிடப்படும்

**தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் அறிக்கை**



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பான அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என, தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்ட தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 2023ஆம் ஆண்டு தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுக்கும் வகையில் நிதியமைச்சின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலேயே, தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே, இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் வருடாந்தம் செவிப்புலன் குறைபாட்டுடன் 400 குழந்தைகள் பிரசவம்

**சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ரவீந்திர கிரிஹேன**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் வருடந்தோறும் 400 பிள்ளைகள் செவிப்புலன் குறைபாட்டுடன் பிறப்பதாக, தேசிய சிறுவர் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர், டாக்டர் ரவீந்திர கிரிஹேன தெரிவித்தார்.

செவி கேளாமை உள்ளிட்ட செவியுடன் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகளை குழந்தை பிறந்து ஓரிரு மாதங்களிலேயே ஆரம்பிப்பதுடன், அதற்கான சத்திர சிகிச்சையை ஒரு வருட காலத்துக்குள்ளேயே மேற்கொள்ள வேண்டும் என்றும், அவர் தெரிவித்தார்.



அவ்வாறில்லா விட்டால், அது மூளை உட்பட பல பாதிப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அவ்வாறு குறைபாடுள்ள பிள்ளைகளை பெற்றோர் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு பின்நிற்பதாகவும் அவ்வாறு செயல்படுவது பிள்ளையின் எதிர்காலத்தை பாதிக்கும் என்றும், அவர் தெரிவித்தார்.

## குழந்தைப் பருவத்தில் சிகிச்சை ஆரம்பிப்பது சிறந்த பலன் தரும்

முறையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் போது சமூகத்தில் ஏனைய பிள்ளைகள் போன்று அவர்கள் இயல்பாக வாழவும் பாடசாலைக்கு சென்று கல்வி கற்கவும் முடியும் என்றும், அவர் தெரிவித்தார்.

06

# வடக்கின் பொருளாதாரம் அபிவிருத்தி குறித்து பேச்சு

**வடக்கு ஆளுநருடன் மாயா கலந்துரையாடல்**


யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய வெளிவிவகார துணைப் பணிப்பாளர் மாயா சிவஞானம், வடக்கில் பல்வேறு அமைப்புகள், சிவில் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்நிலையில், வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் அவர் கலந்துரையாடியுள்ளார். இதன்போது, வடக்கின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி நகர்வுகள் தொடர்பாக அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக, யுத்தத்துக்கு பின்னரான வடக்கின் அபிவிருத்தியில் அரசாங்கங்களின் பங்களிப்புகள் மற்றும் பிரித்தானிய அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன், வடக்கின் நல்லிணக்க வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் முக்கிய கவனம்

06



# சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரின் வீட்டிலிருந்த ரூ.7 இலட்சம் நகை மாயம்

**பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்கவின் உத்தியோகபூர்வ வீட்டிலிருந்த 7 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் காணாமல் போயுள்ளதாக, பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தினுடைய ஊடகப் பேச்சாளரின் உத்தியோகபூர்வ வீடு மகஸின் சிறைச்சாலை வளவில் உள்ள நிலையில், அங்கிருந்தே மேற்படி தங்க நகைகள் காணாமல் போயுள்ளதாக, பொரளை பொலிஸ் நிலையத்தில் அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வீட்டைத் துப்புரவு செய்வதற்கு வழமையாக சிறைக்கைதிகள் பயன்படுத்தப்படுவதாக தெரிய வருவதாகவும் மேலதிக விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.03 | 254.04 |
| கனடியன் டொலர் | 263.67 | 274.49 |
| யூரோ | 378.70 | 393.57 |
| ஜப்பான் யென் | 2.6449 | 2.7490 |
| சிங்கப்பூர் டொலர் | 266.34 | 276.85 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.16 | 446.41 |
| சுவிஸ் பிராங்க் | 382.78 | 399.95 |
| அமெரிக்க டொலர் | 359.00 | 368.52 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.24 | கட்டார் ரியால் | 99.07 |
| குவைத் டினார் | 1,179.31 | சவூதி ரியால் | 96.40 |
| ஓமான் ரியால் | 939.32 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.46 |

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 20ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது

நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது.

## மக்களின் துன்பங்களை மறந்த நிலையில் எதிரணியினர்!

நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் மக்களின் வாழ்க்கைச் சுமை குறித்து எதிரணியினர் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. நாடும் மக்களும் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லையென்ற எண்ணத்துடனேயே அவர்கள் செயற்பட்டு வருவதாகத் தெரிகின்றது. அரசுக்குச் சிக்கலை உருவாக்குவதும், மக்களின் வாக்குகளை வசீகரிப்பதுமே அவர்களது குறிக்கோள்களாக உள்ளன.

நாடு கடுமையான நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் அரசாங்கம் தேர்தலை நடத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. பொருளாதார மீட்சியே அரசின் குறிக்கோளாக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்று, நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதே அரசின் எண்ணமாக உள்ளது. பொருளாதார வல்லுநர்கள், சுயாதீன ஆய்வாளர்கள், பக்கச்சார்பற்ற அரசியல் ஆர்வலர்கள் மற்றும் பௌத்த மகாசங்க உறுப்பினர்கள் பொருளாதாரம் சீராகும்வரை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சிறிது காலம் ஒத்திவைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இருந்தபோதிலும் இந்தக் கோரிக்கைகள் குறித்து சிறிதும் கவனத்தில் எடுக்காமல் ஒரு சில அரசியல் கட்சிகள் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றன. மக்களை ஒன்றுதிரட்டி போராட்டங்களையும் நடத்துகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் என்ன முடிவுகள் கிடைக்கப் பெற்றாலும் அவை மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஆனாலும் மக்களை தவறாக வழிநடத்துவதில் எதிரணியினர் முனைப்பு காட்டுவதையே காண முடிகின்றது.

நாட்டு மக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குதல் மற்றும் தவிர்க்க முடியாத செலவினங்களை நிர்வகிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ள இவ்வேளையில், பெருமளவிலான பொது நிதியைச் செலவழித்து தேர்தலுக்குச் செல்வது தவறென்பதே விஷயமறிந்தவர்களின் கருத்தாக உள்ளது.

கடந்த காலங்களில் உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டதால் அமைதி சீர்குலைந்து, சமூகத்தில் சமூகத்தில் பாதிப்புகள் ஏற்பட்டதை நமது வரலாறு வெளிப்படுத்துகிறது.

பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு நாட்டுக்கு சமூக நல்லிணக்கமும் அமைதியும் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. இந்நிலையில், உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு எதிரணியினர் முயற்சிப்பதென்பது நாட்டை மேலும் அதலபாதாளத்துக்குக் கொண்டு செல்வதற்கே வழிவகுக்குமென்பதை மறந்து விடலாகாது.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக அரசாங்கம் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாவை செலவு செய்வதென்பது ஒருபுறமிருக்க, அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் செலவிடப் போகின்ற செலவுகள் பற்றியும் இங்கு கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

தேர்தல் நெருங்குகின்ற வேளையில் எமது அரசியல்வாதிகளில் பலர் எவ்வாறு பணத்தை வாரியிறைப்பர் என்பது தெரியாத விடயமல்ல. அச்செலவுகள் வீண்விரயமாகும். தேர்தலுக்காக அரசாங்கம் செலவிடுகின்ற பணத்தைப் போலவே அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் செலவிடும் நிலைமை ஏற்படுகின்றது. அது ஆரோக்கியமான நிலைமை அல்ல. ஆனால் எதிர்க்கட்சிகள் இது கவனம் கொள்ளாது தேர்தலை நடத்துமாறு அரசை வலியுறுத்தி வருகின்றன.

தேர்தலால் அரசுக்கு மாத்திரம் ஏற்படப் போகின்ற செலவினங்களுக்கு மத்தியில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு ஏற்படப்போகின்ற செலவினங்களும் நாட்டின் பொருளாதாரத்தில் நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தத்தான் போகின்றன. தேர்தலைக் கோரும் எதிர்க்கட்சிகள் இவ்விடயத்தை ஏன் கவனத்தில் கொள்ளவில்லையென்பதே தற்பொழுதுள்ள பாரிய கேள்விக்குறியாக உள்ளது.

இதற்கும் அப்பால், உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் அவற்றுக்கான செலவினங்களுக்கு அரசாங்கம் எங்கு செல்வது என்பதும் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

நாடு எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலையில் தேர்தலை நடத்தினால் அதன் சுமையை மக்களே சுமக்க வேண்டி ஏற்படும் என்பதுதான் உண்மை.

எனவே, தேர்தலை நடத்துமாறு கோருபவர்கள் இதனால் மக்களுக்கு பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய பின் விளைவுகளுக்குப் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும். அல்லது பொருளாதாரப் பாதிப்புக்களுக்கு மாற்றுத் திட்டங்களைத் தம்வசம் கொண்டிருக்க வேண்டும். இரண்டும் இல்லாத நிலையில் தேர்தல் என்பது வெறுமனே மக்களுக்கு சுமை மாத்திரமே.

நாடெங்கும் மக்களை ஒன்றுதிரட்டி வீணான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதென்பது நாட்டைமென்மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கவே வழிவகுக்குமென்பதை மறந்து விடலாகாது. அதேசமயம் சர்வதேச உதவிகள் கிடைப்பதை தடுக்கும் முயற்சியாகவும் இன்றைய ஆர்ப்பாட்டங்கள் அமைந்து விடமென்பதை மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய உற்சவத்தில் இலங்கை-இந்திய பக்தர்கள்

### நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான உற்சவம் இன்று நிறைவு

இந்தியா இலங்கை கடல் எல்லையில் உள்ள இலங்கைக்குச் சொந்தமான தீவான கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்றும் இன்றும் நடைபெறுகின்ற இரண்டு நாட்கள் திருவிழாவில் பங்கேற்க இலங்கையில் இருந்தும் தமிழ்நாட்டில் இருந்தும் பக்தர்கள் அங்கு சென்றுள்ளனர்.

இலங்கையில் இருந்து ஒருதொகுதி பக்தர்கள் நேற்று கச்சதீவு சென்றிருந்த அதேவேளை தமிழகத்திலிருந்து 72 படகுகளில் 2,408 பக்தர்கள் நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்றனர்.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் கச்சதீவு அந்தோனியார் தேவாலய திருவிழாவில் பங்கேற்க யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. 2010ம் ஆண்டு முதல் கச்சதீவில் தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கை தமிழ் மீனவர்கள் இணைந்து புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் பங்கேற்று வருகின்றனர்.



இந்த ஆண்டு கச்சதீவு திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதில் பங்கேற்க 2,408 தமிழ்நாட்டு பக்தர்கள் கச்சதீவு புறப்பட்டுச் சென்றனர். மொத்தம் 72 படகுகளில் தமிழ்நாட்டு பக்தர்கள் கச்சதீவு சென்றுள்ளனர். கச்சதீவில் இருநாட்டு பக்தர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை இலங்கை கடற்படை செய்திருக்கிறது.

அத்துடன் கச்சதீவு பகுதியில் ரோந்து கப்பல்களையும் இலங்கை நிறுத்தி வைத்துள்ளது. கச்சதீவு திருவிழாவை முன்னிட்டு அப்பகுதிகளில் 5 ஆம் திகதி வரை மீன்பிடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ஒலிபரப்புத் துறையிலிருந்து ஓய்வு பெற்றார் யூனுஸ் கே. றஹ்மான்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக சுமார் 30 வருடங்கள் கடமையாற்றி கடந்த 2022 டிசம்பர் 31ஆம் திகதி தனது பணியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார் யூனுஸ் கே. றஹ்மான்.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கிலுள்ள தோப்பூர் கிராமத்தில் ஓய்வு பெற்ற கிராமத்தலைவர் யூனுஸ்லெப்பை, நாச்சியாப்பிள்ளை தம்பதிகளின் 12 ஆவது மகனாக 1962ம் ஆண்டு நவம்பர் மாதம் முதாலாம் திகதி பிறந்து தன்னுடைய ஆரம்பக் கல்வியை தான் பிறந்த தோப்பூர் கிராமத்தில் அமைந்துள்ள அல் ஹம்றா மஹா வித்தியாலயத்திலும், உயர்தர கல்வியை மூதூர் மத்திய மஹா வித்தியாலயத்திலும் கற்றார். அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்தில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட தையல் பயிற்சி போதனாசிரியை றசீனா கே. றகுமான் என்பவரை திருமணம் செய்து அஷ்பாக் அஹமட் எனும் ஆண் மகனுடன் வாழ்ந்து வருகிறார்.





பாடசாலை காலத்தில் தீ, தென்றல், வாடா மலர், சுரபி போன்ற கையெழுத்துப் பத்திரிகைகளின் ஆசிரியராகவும், ஆசிரியர் குழு உறுப்பினராகவும் கடமையாற்றியதோடு பல பேச்சு போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் பரிசு பெற்ற இவர், மூதூர் பிரதேசத்தின் சிறந்த மேடை அறிவிப்பாளராகவும் திகழ்ந்தார். அத்தோடு பத்திரிகைகளுக்கும், வானொலிக்கும் கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதி வந்துள்ளார். 1992ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபன யாழ்பிராந்திய தமிழ் ஒலிபரப்பின் மூலம் பயிற்சி அறிவிப்பாளராக தனது ஊடக பயணத்தை ஆரம்பித்த இவர், 1994ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கண்டி மலையக வானொலி சேவையில் பகுதி நேர அறிவிப்பாளராக கடமையாற்றினார்.

இக்காலப்பகுதியில் இவரால் தயாரித்து ஒலிபரப்பப்பட்ட மலை முற்றத்தில், மலையக சிறுகதைகள் ஆகிய நிகழ்ச்சிகளை கேட்டு அதன் தரத்தினை உணர்ந்த இந்திய கல்கண்டு, குமுத சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு.லேணா தமிழ்வாணண் இவருக்கு விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என மலையக அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரது சிபாரிசின்பேரில் மலையக கலை கலாசார பேரவை 1998ம் ஆண்டு ரத்ன தீபம் விருது வழங்கி கௌரவித்தது. அதனைத் தொடர்ந்து 1998ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவையின் பகுதி நேர அறிவிப்பாளராக கடமையாற்றினார். 2000ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பவளவிழாவில் சிறந்த சேவையாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2004ம் ஆண்டு ஊடகத்துறை அமைச்சு வழங்கிய புலமைப்பரிசு பெற்று சவுதி அரேபியா இமாம் முஹம்மத் பின் சுஹூத் பல்கலைக்கழகத்தில் புதிய ஊடக தொடர்பாடல் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தார்.

2009ம் ஆண்டு தொடக்கம் 2013ம் ஆண்டு வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகவும், உதவித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றிவந்தார். 2015ஆம் ஆண்டு முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தபான பிராந்திய சேவையான அக்கரைப்பற்றில் இயங்கிவரும் பிறை எப்.எம் வானொலியில் முழு நேர அறிவிப்பாளராக தனது பணியை தொடங்கினார்.

யூனுஸ் கே. றகுமான் 30வருட ஒலிபரப்புத் துறையில் நேயர்களின் விருப்பத்திற்குரிய ஒலிபரப்பாளனாய் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**எம்.எல்.சரிப்டீன்...**
(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

# சோனியா காந்தி மருத்துவமனையில்!

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி திடீரென உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு டொக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

சமீபகாலமாக சோனியா காந்தி உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு வந்தார். இதனால் காங்கிரஸ் கட்சி தலைவர் பதவிக்கு கடந்த ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டது. இதில் மல்லிகார்ஜூன கார்கே தலைவராக தேர்வு செய்யப்பட்டார். சோனியா காந்தி தனது தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.



இதையடுத்து டெல்லியில் நடக்கும் கட்சியின் முக்கிய ஆலோசனைகளில் மட்டும் சோனியா காந்தி பங்கேற்று வருகிறார். பிற மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்வது, தேர்தல் பிரசாரம் மேற்கொள்வது உள்ளிட்டவற்றை சோனியா காந்தி ஓரம்கட்டி உள்ளார்.

இந்நிலையில் தான் சோனியா காந்தி திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. டெல்லியில் அமைந்துள்ள சர் கங்கா ராம் மருத்துவமனையில் சோனியா காந்தி நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் அவருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு டொக்டர்கள் குழுவினர் கண்காணித்து வருகின்றனர்.

முன்னதாக 5 நாட்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியின் 2 நாள் மாநாடு சத்தீஸ்கார் மாநிலம் ராய்ப்பூரில் சில நாட்களுக்கு முன்பு நடந்தது. இதில் சோனியா காந்தி பங்கேற்று பேசினார். அப்போது, காங்கிரஸ் கட்சிக்கு பாரத் ஜோடோ யாத்திரை திருப்பு முனையாக அமைந்துள்ளது. இந்த யாத்திரையுடன் எனது இன்னிங்ஸ் (அரசியல் பயணம்) நிறைவு பெற்றுள்ளது. 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவை தோற்கடிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சியினர் செயல்பட வேண்டும்'' என பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(நேற்றைய தொடர்)

# பணம் அச்சிடல் தொடர்பான கட்டுக்கதைகள்

நாடு தேறிய அடிப்படையில் கணிசமானளவிலான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்ளும் வரை, மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் உயர் மட்டங்களில் தொடர்ந்தும் காணப்படக்கூடும். பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் ஒப்புதலானது மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களை விரைவாகக் கட்டியெழுப்புவதற்கானதொரு வழியினை வகுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அதிகரித்த அரசிறைச் சேகரிப்பு மற்றும் அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நிதியிடலின் மீளாரம்பம் என்பவற்றுடன் இணைந்து அரசாங்கத்திற்கு நிதியிடலிலிருந்து மத்திய வங்கியினைத் தடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளின் அறிமுகத்துடன் மத்திய வங்கி அரசாங்கத்திற்கு நிதியிடலின் ஊடாக தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் மேலதிக கட்டியெழுப்புதல் தடுக்கப்படும்.

சாதாரண பொருளாதார நிலைமைகளின் கீழ், ஒரு நாட்டினது ஒட்டுமொத்த நாணய விரிவாக்கமானது பொருளாதாரத்தில் கொடுக்கல்வாங்கல்களின் ஒட்டுமொத்த பெறுமதியுடன் பொருந்த வேண்டும். மக்களின் வருமான மட்டங்களில் பொதுவான அதிகரிப்பு ஏற்படுவதன் காரணமாக எந்தவொரு விஞ்சியளவிலுமான பண அச்சிடலும் பொருளாதாரத்தில் கேள்வி அழுத்தங்களை உருவாக்கக் கூடுமென்பது பொதுவான புரிதலாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கேள்விக்கு மேலதிகமாக, அதிகரித்த வருமானத்தின் பகுதியொன்றினை பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளுக்காகத் திருப்பிவிடப்படலாம் என்பதுடன் திறந்த பொருளாதார கட்டமைப்பொன்றினுள் சென்மதி நிலுவை மற்றும் செலாவணி வீதம் என்பன மீதான அழுத்தத்தை அதிகரிக்கக்கூடும்.

ஒரு நாட்டின் மொத்தப் பண நிரம்பலானது நாணயத் தளத்தின் அல்லது ஒதுக்குப் பணத்தின் அடிப்படையிலமைந்துள்ளமையினால் விஞ்சியளவிலான பணம் அச்சிடலானது பணவீக்க அழுத்தங்களுக்கு வழிவகுப்பதனால் மத்திய வங்கியொன்றினால் பொருளாதாரத்திற்குப் புதிய பணத்தை வழங்குவதில் நன்கு கட்டுப்படுத்தப்பட்ட பொறிமுறையொன்று காணப்படுகின்றது

அண்மைய தசாப்தங்களில் பண நிரம்பலிற்கும் பணவீக்கத்திற்கும் இடையிலான இணைப்பானது உலகளவிலும் இலங்கையிலும் பலவீனமடைந்து வருகின்றது. இது இலங்கை உள்ளடங்கலாக உலகெங்கிலுமுள்ள பல மத்திய வங்கிகள், நடுத்தர காலப்பகுதியில் பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட மட்டங்களில் நிலைநிறுத்துவதற்காக பணவீக்க இலக்கிடல் நாணயக் கொள்கைக் கட்டமைப்பிற்கு மாறுவதற்கு முக்கியமானதொரு காரணமாகும். உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் கொவிட்19 உலகளாவிய நோய்த்தொற்று என்பவற்றிற்கு மத்தியில் உலகெங்கிலுமுள்ள பல மத்திய வங்கிகள் அவற்றினது தொடர்புடைய பொருளாதாரங்களைத் தூண்டும் பொருட்டு பண நிரம்பலினை விரிவுபடுத்தின.

இருப்பினும், இத்தகைய விரிவாக்கங்கள் விஞ்சியளவிலான பணவீக்க அழுத்தங்களை உருவாக்கவில்லை. ஆயினும், பொருளாதாரங்கள் மீட்சிக்கான சமிக்ஞைகளைக் காண்பிக்கத் தொடங்கிய போது முக்கிய மத்திய வங்கிகளின் ஐந்தொகைகளில் அத்தகைய விரிவாக்கங்கள் படிப்படியாக மீளப் பெறப்படுகின்றன. இத்தகைய மீளப் பெறலும் எதிர்காலத்தில் உயர்ந்தளவிலான பணவீக்கத்திற்கு வழிவகுக்கக்கூடிய பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகளைக் கட்டுப்படுத்த உதவியது. இது விஞ்சியளவிலான பண நிரம்பலானது உயர்ந்தளவிலான பணவீக்கத்திற்கு வழிவகுக்கக்கூடுமென்பதற்கான சாத்தியப்பாடொன்று காணப்படுவதனை காண்பிப்பதுடன் கூட்டுக் கேள்வி மீதான அதன் சாத்தியமான நேரடித் தாக்கத்தின் காரணமாக மட்டுமன்றி செலாவணி வீத அழுத்தங்கள் மற்றும் பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பன மீதான விஞ்சியளவிலான பண நிரம்பலின் சாத்தியமான தாக்கத்தின் காரணமாகவும் உலகெங்கிலுமுள்ள மத்திய வங்கிகள் இது குறித்து தொடர்ந்தும் விழிப்புடன் இருக்கின்றன.



**ஜனக எதிரிசிங்ஹ**
பணம் மற்றும் வங்கித்தொழில் பிரிவின் தலைவர்/சிரேஷ்ட பொருளியலாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி



# இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு முதன்முதலில் கைகொடுத்த நாடு இந்தியா!

**இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. சர்வதேச உதவிகள் ஊடாகவே இலங்கை மீண்டெழ முடியும். இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்குத் தயாராக உள்ள போதிலும், கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனாவின் ஆதரவு போதுமானதாக இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை சமீபத்தில் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் உட்பட பலர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இலங்கைக்கு கடன் வழங்கப்படுவதில் சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் நம்பகரமான உத்தரவாதத்தை இந்தியா ஏற்கனவே வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த அறிவிப்பை இந்தியா வெளிப்படையாகவே ஏற்கனவே கூறி விட்டது. ஆனால் இந்த விடயத்தில் சீனாவிடமிருந்து நம்பகத்தன்மையான அறிவித்தலை இன்னுமே காண



முடியாதிருக்கின்றது.

எனவே இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனுதவி கிடைப்பதில் தாமதங்களும் தொடர்கின்றன.

சீனா இதுவரை வழங்கிய உத்தரவாதம் போதுமானதாக இல்லை எனவும், சீனாவிடமிருந்து நம்பகமான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் எனவும் பொருளாதார நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையிலான சான்றிதழை சீனா முதலில் வழங்க வேண்டும். அதன் பின்னரே இலங்கைக்கு கடன் வழங்குவதற்கான பாதைகள் திறக்கும் என்பதே உண்மை.

இலங்கைக்கு பாரியளவில் கடன் வழங்கிய நாடுகளை எடுத்துக் கொண்டால் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன. கடன் மறுசீரமைப்பிற்காக இந்த இரு நாடுகளின் இணக்கத்தை பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் பாரிய முயற்சிகளை முன்னெடுத்திருந்தது. இந்நிலையில் கடன் மறுசீரமைப்பிற்கு இந்தியா உடனடியாகவே இணக்கம் தெரிவித்து விட்டது.

'அயல் நாட்டுக்கு முன்னுரிமை' என்ற கொள்கையில் இருந்து இந்தியா ஒருபோதுமே பின்வாங்கியது கிடையாது. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற போதிலும் சரி, கொவிட் தொற்று காரணமாக கதிகலங்கி நின்ற போதிலும் சரி இலங்கைக்கு உதவி புரிவதில் இந்தியா ஒருபோதுமே பின்வாங்கியதில்லை.



இலங்கையின் துயர்துடைப்பதில் விரைந்து வந்து முதலில் உதவும் நாடு இந்தியா ஆகும்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கான இணக்க சான்றிதழை தாம் சர்வதேச நாணய நிதியத்திடமே கையளித்து விட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்திருந்தார். இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் செய்திருந்த வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

''ஏனையோர் செய்வார்கள் எனக் காத்திருப்பதைத் தவிர்த்து, நாங்கள் சரியானது என நம்புவதை செய்தோம்" ஜெய்சங்கர் கூறியிருந்தார்.

இலங்கையின் துயர் துடைப்பதில் இந்தியா எத்தனை தூரம் கரிசனை காட்டுகின்றதென்பதற்கு இதனை விட சான்று எதுவும் தேவையில்லை.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சான்றிதழை, இந்தியா சர்வதேச நாணய நிதியத்திற்குக் காலதாமதமின்றி அனுப்பியுள்ளதாகவும் ஏனைய கடனாளிகளும் அவ்வாறே செய்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், சீனாவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. எனினும், சீனாவினால் வழங்கப்பட்ட இந்த இணக்கமானது, சர்வதேச நாணய நிதியத்திற்கு போதுமானது அல்லவென அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனா இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பின்வாங்கியுள்ளது என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

சீனாவின் கடன் வழங்கும் கொள்கையில், கடன் மறுசீரமைப்பு என்ற திட்டம் கிடையாது. சீனா எந்தவொரு நாட்டிற்கும் அவ்வாறு செய்வதில்லை. சீனாவைப் பொறுத்தவரை தனது பொருளாதார நலன் மீதே அந்நாடு கவனம் செலுத்துவதுண்டு.

நேசநாடுகளின் பொருளாதார நலன் தொடர்பாக அர்ப்பணிப்புகளுக்கு சீனா எப்போதுமே முன்வந்ததில்லை.

சீனாவின் கடன் திட்டமானது, நீண்டகால இலக்குகளை கொண்ட கடனாகவே இருக்குமே தவிர, கடன் மறுசீரமைப்புக்கு அந்நாடு செல்லுமென எதிர்பார்க்க முடியாது. இதுவரை ஆபிரிக்காவிலுள்ள ஒரு தீவு நாட்டிற்கு மாத்திரம் அவர்கள் சீனா கடன் மறுசீரமைப்பிற்கு உடன்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



பிறநாடுகளுக்கு கடன் வழங்கும் போது, தூரநோக்குள்ள இலக்குகளை சீனா கையாளுகின்றது. கடன் பெறுகின்ற நாடுகளில் பாரிய தொழில் முதலீடுகளை சீனா எதிர்பார்க்கின்றது. நீண்ட கால முதலீடுகளே சீனாவின் இலக்கு ஆகும். இவ்வாறான நிலையில் கடன் வழங்கிய நாடு ஒன்றுக்கு கடன் மறுசீரமைப்புக்காக சீனா உதவுமென்பது இலகுவான விடயமல்ல என்கிறார்கள் சர்வதேச அவதானிகள்.

இலங்கை சர்வசேத்திடமிருந்து வாங்கிய கடனில் 55 வீதம் சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்படியான சூழலில் சீனா கடன் மறுசீரமைப்புக்கு உடன்படுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

சீனா, இலங்கை உட்பட பல தீவு நாடுகளுக்கு கடனுதவிகளை வழங்கியுள்ளது. சீனாவின் கடனானது, துறைமுகங்கள், விமான நிலையங்கள், வர்த்தக மையங்கள் போன்ற திட்டங்களை மையமாகக் கொண்ட திட்டங்களை இலக்காகக் கொண்டதாகும்.

இது ஒருபுறமிருக்க, 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தின் கீழ் (வீதிகள், புகையிரதம், துறைமுகங்கள், சுரங்கம் மற்றும் எரிசக்தி துறை சார்ந்தவை) வளர்ந்துவரும் நாடுகளுக்கு சீனா கடன்களை வழங்கிவரும் சூழலில் இலங்கைக்கான கடனை மறுசீரமைப்பு செய்வது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கவலை சீனாவுக்கு அதிகம் உள்ளது.

இலங்கை பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான வழியை தெளிவுபடுத்துமாறு இந்தியா சர்வதேச நாணய நிதியத்திற்கு ஏற்கெனவே அறிவித்திருந்தது. இந்தியா வெளிவிவகார அமைச்சர்

## 'அயல்நாட்டுக்கே முன்னுரிமை' என்ற கொள்கையிலிருந்து இந்தியா ஒருபோதுமே பின்வாங்கியதில்லை

கலாநிதி எஸ். ஜெய்சங்கர் கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறும் போது "இலங்கைக்கான பாதையை தெளிவுபடுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்திற்கு இந்தியா உத்தரவாதம் அளித்துள்ளது" என்று குறிப்பிட்டிருந்தார்.

சீனா எக்சிம் மற்றும் சி.டி.பி ஆகிய இரு நிறுவனங்களிடமிருந்தும் இலங்கை பெருமளவு கடன் பெற்றுள்ளது, அவை தனித்தனியாக செயல்படுகின்றன. எனவே அந்நிறுவனங்கள் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்ப செயல்படும் என்று எதிர்பார்க்க முடியாது. சீனா எக்சிம் வங்கியில் கூட, பல்வேறு வகையான கடன்களை வழங்கும் பல்வேறு துறைகள் உள்ளன.

எனவே சீனாவைப் பொறுத்தவரை கடன் மறுசீரமைப்பு சிக்கல்கள் அங்கு முடிவடையவில்லை என்பதே உண்மை. சீனா இதுவரை வழங்கிய உத்தரவாதம் போதுமானதாக இல்லை. சீனாவிடமிருந்து நம்பகமான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## கடன் மறுசீரமைப்பில் சீனாவின் உத்தரவாதம் போதுமானதாக இல்லையென பொருளாதார நிபுணர்கள் கருத்து!

**எஸ். சாரங்கன்...**

# ஒந்தாச்சிமடத்தில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் இருந்து கிடைத்த பெரும் உதவி!

**அவுஸ்திரேலியாவில் வாழும் ஒந்தாச்சிமடம் பழைய மாணவர்களால் ஓந்தாச்சிமடம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பல பெறுமதியான கற்றல் காலை ஆராதனையில் வழங்கப்பட்டன.**

பாடசாலை அதிபர் திருமதி மதிவதனி பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார். நன்கொடை அதிதியாக நன்கொடையாளர் சார்பாக அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த பிரபல சமூக சேவையாளர் கோபாலபிள்ளை ஜனபாலச்சந்திரன் (பாலன்) கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி அ.சற்குணராஜா மற்றும் ஆசிரியர் முத்தையா ஜெயாதி ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

கடந்த வருட கபொத. சாதாரண பரிட்சையில் சாதனை படைத்த 40 மாணவர்களுக்கும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவருக்கும் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவர்களை கற்பித்த ஆசிரியர்களும் பெறுமதியான பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அவுஸ்திரேலியாவிலிருந்து வயிரமுத்து அழகையா, முத்தையா மாறன், கோபாலபிள்ளை ஜனபாலசந்திரன், தெய்வநாயகம் சௌந்தரராசன், கோபாலன் ரவீந்திரன், நடராசமணி கனகராஜ், செல்வராசா சுதர்சன், யோகலிங்கம் உமாகாந்தன், கிருபைராசா அமரதாஸ், அருணாசலம் இன்பநாதன் ஆகிய பழைய மாணவர்கள் இந்த பாரிய கல்வி ஊக்குவிப்பு உதவித் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



**காரைதீவு குறூப் நிருபர்...**

# கிளிநொச்சி இலக்கியச் சந்திப்பில் மூன்று எழுத்தாளர்களுக்கு பரிசும் சான்றிதழும்

**அவுஸ்திரேலியாவில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும், விக்ரோரியா மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட அமைப்பான அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இங்கே வெளியிடப்படும் தமிழ் நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.**

கடந்த 2019, 2020 ஆம் ஆண்டுகளில் தெரிவான நூல்களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் ஏற்கனவே வழங்கியிருக்கும் இச்சங்கம், கடந்த 2021 ஆம் ஆண்டு வெளியாகி, இந்தப் போட்டிக்கு கிடைக்கப் பெற்ற நூல்களையும் நடுவர் குழுவின் மூலம் பரிசீலனை செய்து இம்முறையும் பணப்பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கியது.

இலங்கை வந்திருந்த சங்கத்தின் நடப்பாண்டு செயலாளர் டொக்டர் நடேசன் தலைமையில் , சங்கத்தின் உறுப்பினர் எஸ். கிருஷ்ணமூர்த்தியின் வரவேற்புரையுடன் இந்நிகழ்வு கிளிநொச்சி பழைய ஆஸ்பத்திரி வளாகத்தில் அமைந்த சமூக மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இம்முறை சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் மூன்று நூல்கள் போட்டியில் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தன. நாவல், மொழிபெயர்ப்பு துறைகளில் இம்முறை எந்த நூலும் பரிசுக்குரியதாக தெரிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'வேப்பமரமும் பவளம் ஆச்சியும்' என்ற சிறுகதை தொகுதியை எழுதிய விவேகானந்தனூர் சதீஸ் சார்பில் பரிசுத்தொகை ஐம்பதினாயிரம் ரூபாவையும் சான்றிதழையும், அவரது தாயார் திருமதி செல்லையா பவளவள்ளி பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளர் விவேகானந்தனூர் சதீஸ் கடந்த பலவருடங்களாக அரசியல் கைதியாக சிறையிலிருந்து பொதுமன்னிப்பின் கீழ் தற்போது விடுதலையாகியிருப்பவர் என்பது குறிப்பிடத் தக்கது. எனினும் சில சட்ட விதிமுறைகளினால், அவரது வருகை தாமதமடைந்தமையினால், அவரின் தாயார் பெற்றுக் கொண்டார். இவருக்கான பரிசு மறைந்த மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

கவிதைத் துறையில் எழுத்தாளர் கருணாகரன் தனது 'கடவுள் என்பது துரோகியாயிருத்தல்' என்ற நூலுக்காக ஐம்பதினாயிரம் ரூபாவையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார். இந்தப்பரிசு அமரர் திலகவதி சிவகுருநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

கட்டுரைப் பிரிவில் மன்னார் மாதோட்டப் புலவர்கள் – கலைஞர்கள் என்ற நூலை எழுதிய அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் ஐம்பதினாயிரம் ரூபாவையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.


குறிப்பிட்ட பரிசுத்தொகைகளை அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்கள் லெ. முருகபூபதி (எழுத்தாளர் அமரர் தெணியான் நினைவுப் பரிசு), ரோய் லெம்பேட் (கலைஞர் அமரர் தொபியாஸ் மக்சிமஸ் லெம்பேட் நினைவுப் பரிசு), எழுத்தாளர் திருமதி சகுந்தலா கணநாதன் (அமரர் திலகவதி சிவகுருநாதன் நினைவுப்பரிசு) ஆகியோர் வழங்கியிருந்தனர்.





# நித்தியானந்தாவின் பிரதிநிதி ஐ.நாவுக்குள் நுழைந்தது எவ்வாறு?

**கடந்த மாதம் 22ஆம் திகதி நடந்த மா.விஜயப்ரியா நித்தியானந்தா என்ற பெண், 19வது ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் கூட்டத்தில் கைலாசா நாட்டின் சார்பில் கலந்து கொண்டதாக ஒரு வீடியோ வெளியாகியிருந்தது. ஐ.நா கூட்டத்தில் கலந்து கொள்ள எப்படி அனுமதி கிடைத்தது என்று சமூக வலைத்தளங்களில் பலரும் ஆழமாக விவாதித்ததை காண முடிந்தது. இந்த நிலையில், ஐநாவில் எந்த அடிப்படையில் பேச அனுமதி கிடைத்தது என்ற விபரம் வெளியாகி இருக்கிறது.**



பிணையில் வெளிவந்த நித்தியானந்தாநாட்டை விட்டு வெளியேறி தலைமறைவானார். நித்தியானந்தாவிற்கு எதிராக குஜராத் நீதிமன்றத்திலும் வழக்கு நிலுவையில் உள்ளது. இப்படி இந்தியாவின் பல மாநிலங்க்ளில் வழக்குகள் இருக்கும் நிலையில், நாட்டை விட்டு வெளியேறி தலைமறைவான நித்தியானந்தா தற்போது எங்கு இருக்கிறார் என்ற விபரம் யாருக்கும் தெரியவில்லை.

சமூக வலைத்தளத்தில் மட்டும் வீடியோவில் தோன்றி பேசி வந்த நித்யானந்தா, திடீரென கைலாசா என்ற நாட்டை உருவாக்கியிருப்பதாக கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். அத்தோடு நிற்காமல் கைலாசா நாட்டிற்குத் தனிக்கொடி, நாணயம், வெளியுறவுத்துறை என அறிவிப்பு வெளியிட்டு பரபரப்பை கிளப்பினார். அவ்வப்போது யூடியூப் பக்கத்தில் தோன்றி பேசும் நித்யானந்தாவிற்கு உடல் நிலை பாதிக்கப்பட்டதாக தகவல் பரவின. பிறகு அதற்கும் நித்தியானந்தாவே வீடியோவில் தோன்றி விளக்கம் அளித்தார்.

இப்படி அவ்வப்போது பரபரப்பை கிளப்பிக் கொண்டு இருக்கும் நித்தியானந்தாவின் அடுத்த அதிரடியாக ஐ.நா சபைக்கு தனது கைலாசாவின் பிரதிநிதிகளை அனுப்பியதாக கூறினார். இது தொடர்பாக வீடியோக்களும் வெளியாகி இருந்தன. அதில், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒஃப் கைலாசா என்று சொல்லி அதன் பிரதிநிதியாகப் பெண் ஒருவர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு இருந்தார்.

கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி நடந்த ஐநா கூட்டத்தில், மா.விஜயப்ரியா நித்தியானந்தா என்ற பெண், 19வது ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் கூட்டத்தில் கைலாசா நாட்டின் சார்பில் கலந்து கொண்டார். நிலையான வளர்ச்சி குறித்து நடந்த மாநாட்டில் பேசிய அவர், இந்து மதத்தில் நிலையான வளர்ச்சி குறித்துப் பேசப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். மேலும், இந்துக்களுக்குத் தனியாக ஒரு நாட்டை நித்தியானந்தா உருவாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கைலாசா நாட்டின் பெருமைகள பேசிய அவர், நித்தியானந்தா தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் பேசியிருந்தார். இது தொடர்பான புகைப்படங்கள் நித்தியானந்தாவின் டிவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டு இருந்தன. ஐநாவில் 'முடிவெடுக்கும் விஷயங்களில் பெண்களுக்கு சம உரிமை'என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றதாகவும் அதில் கைலாசா பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும் கூறப்பட்டு இருந்தது.

ஜெனிவாவில் உள்ள ஐநா மனித உரிமை அமைப்பானது தங்கள் கூட்டத்தில் எந்த ஒரு அமைப்பை சேர்ந்தவர்களையும் பேச அனுமதி கொடுக்கிறது. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திய நித்தி கும்பல் கைலாசாவை ஐ.நா அங்கீகரித்தது போன்ற ஒரு பிம்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் அவையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், "கைலாசாவை சேர்ந்த பிரதிநிதிகள் கடந்த மாதம் ஐ.நா கூட்டத்தில் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட தலைப்பிற்கு பொருத்தம் இல்லாத கருத்துக்கள் நித்தியானந்தா பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன. எனவே நித்தியானந்தா தரப்பினரின் கருத்துக்கள் ஐக்கிய நாடுகள் அவையால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது" என்றார்.

## நாட்டில் தங்க விலையில்...

இலங்கையில் கடந்த இரண்டு மாதங்களாக தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்த வண்ணம் உள்ளதுடன், 24 கரட் தங்கப் பவுண் ஒன்று நேற்று முன்தினம் 183,500.00 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

இதேபோல், 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 168,250.00 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

மேலும், 21 கரட் தங்கப் பவுண் ஒன்று 160,600.00 ரூபாவாக நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது. இருப்பினும், ஆபரணத் தங்கத்தின் விலை இந்த விலைகளிலிருந்து மாறும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, இலங்கையில் கடந்த மாதங்களில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்று வரலாறு காணாத வகையில் உயர்ந்து 200,000 ரூபாவை எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு பொலன்னறுவை ...

மாவட்ட விவசாய அமைப்பின் தலைவர் ஆனந்த ராஜபக்ஷ தலைமையிலான விவசாயச் சமூகத்தினர் இதன்போது ஜனாதிபதிக்கு பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தனர். விவசாய சமூகத்துக்காக ஜனாதிபதி ஆற்றிய சேவையை பாராட்டி தங்க நெற்கதிரையும் அவர்கள் இதன்போது பரிசளித்தனர்.

## பாடசாலைக் கல்வியை...

மாணவர்களுக்கு தொழிற்கல்வியைக் பெற்றுக்கொடுப்பதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

நாட்டில் காணப்படுகின்ற தொழில் தேவைகளுக்கு ஏற்றவாறு தங்களது பிள்ளைகளை தொழிற்கல்வி ஊடாக தகுதியுடையவர்களாக மாற்றுவதற்கு பெற்றோர் வழிகாட்ட வேண்டும்.

தொழில் தகுதியுடையவர்களாக பிள்ளைகளை மாற்ற வேண்டுமாயின், முதலில் பெற்றோரிடத்தில் மாற்றம் வர வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

## கொழும்பில் இன்று ...

நீர் விநியோகம் தடைப்படும்.

அதன்படி, நாளை (04) பிற்பகல் 2.00 மணி முதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (05) பிற்பகல் 2.00 மணி வரை நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

எனவே, நீர் வெட்டுக் காலப்பகுதியில் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்வதற்காக முன்கூட்டி நீரை சேமித்து வைத்துக்கொண்டு சிக்கனமாகப் பயன்படுத்துமாறு, பொது மக்களை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

## சீனா சுற்றுலாப் பயணிகள்...

சுற்றுலாத்துறை பாதிப்படையும் வகையில் எவரும் செயற்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவிலிருந்து பெருமளவு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். சீனாவிலிருந்து 5 இலட்சம் உல்லாசப் பிரயாணிகள் இவ்வருடத்தில் இலங்கைக்கு வருகை தந்தால், உல்லாசப் பிரயாணத்துறை பெரும் முன்னேற்றமடையும். அதன் மூலம் கிடைக்கும் வருமானம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் நிதிக்குச் சமமாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையருக்கு ஜப்பானில்...

சமர்ப்பிக்க வேண்டுமென, அப்பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slbfe.lk இல் பெற்றுக்கொள்ள முடியும்.

தேவையான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை titp@slbfe.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியுமெனவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலையில்...

சுற்றிவளைப்பின் போதே, சட்டவிரோதமாகச் சேவையில் ஈடுபட்ட மேற்படி நான்கு பஸ் வண்டிகளையும் கைப்பற்றியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பாக, அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் பஸ் வண்டிகளில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவதுடன், மேற்படி நான்கு

பஸ் வண்டிகளிலும் மக்கள் நின்றுகொண்டு பயணம் செய்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, அலுவலக பஸ் சேவை என்ற போர்வையில் சாதாரண பயணிகளை அவர்கள் ஏற்றிச் சென்றமை தெரிய வருவதாகவும் அந்தப் பஸ்களின்

உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## எஜமானின் மறைவுக்கு...

இது தொடர்பான காணொளி ஒன்று இணையத்தளத்தில் வெளியாகி நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தம்புள்ளை, கண்டலம பகுதியில் நபர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார். இந்நிலையில், தனக்கு உணவு, நீர் வழங்கிய எஜமானின் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத யானை கண்ணீர் விட்டு அழுதது.

உயிரிழந்த தனது எஜமானுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அந்த யானை சென்ற நிலையில், மண்டியிட்டு அஞ்சலி செலுத்தியது. அத்துடன், உயிரிழந்தவரினுடைய உறவினர்களின் கைகளைப் பிடித்து யானை சோகத்துடன் தனது கவலையை வெளிப்படுத்திய பின்னர், அங்கிருந்து சென்றது.

ஐந்து அறிவு படைத்த யானையின் இந்தச் செயற்பாடு, அனைவரையும் கண் கலங்க வைத்துள்ளது.

## 'சர்வதேச வர்த்தக சந்தை'...

கண்காட்சிக் கூடத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நாடா வெட்டித் திறந்து வைத்ததுடன், கொழும்பிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களை இணைத்து யாழ்ப்பாணத்தில் இந்தச் சந்தை நடத்தப்படுகின்றது.

250 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 ஆயிரம் பேர் வந்துள்ளார்கள். சுமார் 45 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் பேர் பார்வையாளர்கள் வருகை தருவார்கள் எனவும் எதிர்பார்ப்பதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை சீருடையுடன் வரும் மாணவர்கள், இந்தக் கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியும் எனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பல வருடகாலமாக வடக்கின் கைத்தொழில்துறை வளர்ச்சி மற்றும் சந்தை வாய்ப்பில் இருந்த பாரிய இடைவெளிகள், ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் கண்காட்சிகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து சந்தைப் படுத்துவதற்கும் தொழில்நுட்ப ரீதியில் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்கும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களுக்கு அவசரமான...

மேலும் சில அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவியமைக்கு பதிலளித்த அவர், எந்தவொரு அரசாங்கமும் தனது எதிர்கால நலன் கருதி அமைச்சர்களை நியமிக்கும் எனவும், தெரிவித்தார்.

## இந்திய மீனவரைக் கண்டு...

கடலில் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை பிடியுங்கள். பிரச்சினைகளைக் கையாள்வதற்கு நான் இருக்கிறேன்" எனவும் அவர் தெரிவித்தார்.

## பற்றாக்குறையாகவுள்ள...

நிலைமை தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை:...

அவர்களுக்கான கொடுப்பனவை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# குமுக்கன் ஆற்றங்கரை மஹாகாளிதேவி சந்நிதியில் மாபெரும் சண்டி ஹோமம்!



குமுக்கன் ஆற்றங்கரை மஹாகாளிதேவி சந்நிதியில் மாபெரும் சண்டி ஹோமம்!

கிழக்கின் தென்கோடியில் உள்ள குமுக்கன் ஆற்றங்கரையில் சித்தர்களுக்கே காவல் சக்தியாக விளங்குகின்ற அன்னை மஹாகாளி தேவி சன்னிதியில், இந்த பூமிக்கே அதீத சக்திகளை உயிரூட்டும் அற்புதமான மாபெரும் சண்டி ஹோமம் (26) ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் முன்னிலையில் இடம்பெற்ற இம் மாபெரும் நான்காவது சண்டி ஹோமத்தின் வேள்வி கிரியைகளை, இலங்கையின் இலங்கை பிரபலஇணுவில் தர்ம சாஸ்தா குருகுல வேத வாத்தியார் சிவஸ்ரீ வத்சாங்க குருக்கள் உள்ளிட்ட 10 சிவாச்சாரியார்கள் எட்டு மணி நேரம் சிறப்பாக நடாத்தினார்கள். இவர்கள்அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்தவர்கள்.

ஹோமத்துக்கான திரவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தன.

அடர்ந்த கானகத்தின் மத்தியில் அமைந்துள்ள குமுக்கன் ஆற்றங்கரை மஹாகாளி தேவி சந்நிதியில், சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி சங்கல்பத்தில் இருந்து யாகத்தில் பங்கேற்றார்.

யாகத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் ,உப தலைவர் மனோகரன், நமசிவாய மகேஸ்வரன் சுவாமி, ஸ்ரீ தியாகராஜா, ஸ்ரீ சகாதேவராஜா, ஸ்ரீ லதன் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை சபையின் திருமலை பிராந்திய பிரதம பொறியியலாளர் எந்திரி. தெய்வநாயகம் சுரேந்திரகுமார் (காரைதீவு) குடும்பத்தினரும் யாகத்தில் பங்கேற்றனர்.

(26) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு மாபெரும் சண்டி ஹோமம் ஆரம்பமாகியது. தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் ஆதாரமாக இருக்கும் 13 சக்திகளுக்கும் யாகத்தில் சிறப்பு பூஜைகள், 64 உபசாரங்கள் இடம் பெற்றுபிற்பகல் 4 மணிக்கு பூர்ணாகுதி இடம் பெறுதலுடன் ஹோமம் நிறைவுக்குவந்தது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி சகல சித்தர்களுக்கும் செந்நிற வேஷ்டிகளை வஸ்திரதானம் வழங்கி வைத்தார்.

குமண பறவைகள் சரணாலய வனத்துறை அதிகாரி பி.சமரநாயக்க பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். ஊடகத்துறை சித்தர் வி.ரி.சகாதேவராஜா வெட்டிவேர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

யாகத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் உறுப்பினர்களானகிஷானன், ரூபன், டிரோன், அருள், மதுஸ், அருண், பிரதீஸ், விவேஷாகர், பிராஜானந் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

**குமுக்கனிலிருந்து
வேதசகா**





## இலங்கையில் வரி சீர்திருத்தம்...

இதனைத் தெரிவித்துள்ளனர்.

வரி வருவாயை உயர்த்துவது, ஏழை மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாக்கும் என்று அது கூறுகின்றது. பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான முறையில் செயற்படுத்த வேண்டும் எனவும் உரிய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வரி சீர்திருத்தம் காரணமாக இலங்கை மக்கள் இந்த நேரத்தில் அனுபவிக்கும் சிரமங்களை தாம் புரிந்து கொண்டுள்ளதாகவும், சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வேலை இழப்பு, வாழ்வாதார இழப்பு மற்றும் உண்மையான வருமானத்தின் சரிவு ஆகியவை மக்கள் தொகையில் பெரும் பகுதியை பாதித்துள்ளன.

இந்த சிரமங்களைத் தாங்க முடியாத ஏழை மற்றும் நலிந்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அரச வரி வருவாயை ஆதரிக்கக்கூடிய குழுக்கள் உரிய வரிகளைச் செலுத்த முன்வர வேண்டும் என்றும் புதிய வரிக்கொள்கை சர்வதேச தரத்துக்கு ஏற்ப உள்ளது என்றும், அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பாதித்த காரணங்கள் தொடர்பிலும் இந்த அறிவிப்பில் உண்மைகள் வெளியாகியுள்ளன. வருவாய் வசூல் மூலம் அரசாங்கத்தின் செலவுத் தேவைகளை அரசாங்கம் பூர்த்தி செய்யவில்லை என்பதும் ஒரு காரணம். கடந்த 2021ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் வரி வருமானம் சுமார் 7.3% ஆகவும் இருந்துள்ளது.

இதன் மூலம், உலகில் மிகக் குறைந்த நிதி வருமானம் பெறும் நாடுகளில் இலங்கையும் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இந்த இடைவெளியை நிரப்ப வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் நிதி உதவி வழங்க விரும்பவில்லை என்றும், அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## பாராளுமன்றத் தேர்தல்...

அதிகாரிகளாகும் விமானப்படை வீரர்களுக்கு ஜனாதிபதியினால் 'வாள்' வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

அரசியலமைப்பைப் பாதுகாப்பதும் நாட்டைப் பாதுகாப்பதும் படையினரின் பொறுப்பாகும். ஏனெனில், நாடு இல்லாமல் அரசியலமைப்பு இல்லை. ஒரு நாடு இல்லாவிட்டால், அரசியலமைப்பு வெறும் காகிதத் துண்டாகவே இருக்கும்.

ஒரு நாடு இருப்பதாலேயே அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. படையினராகிய நீங்கள் அளித்த சத்தியப்பிரமாணத்தின்படி இந்நாட்டு அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் உட்பட்டு செயல்படவும் குடியரசுக்கு விசுவாசமாகச் செயற்படவும் உறுதியளித்துள்ளீர்கள்.

எமது நாட்டின் அரசியலமைப்பின் முதல் சரத்து, "இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால், அரசியலமைப்பு இருப்பது குடியரசுக்காகத்தான். நாட்டின் ஒற்றையாட்சி பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அத்தியாயம், மக்கள் இறையாண்மையை செயல்படுத்தும் நிறுவனங்கள், தேசியக் கொடி மற்றும் எமது தேசிய கீதம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. ஏனைய அனைத்து அத்தியாயங்களும் இவற்றைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லவே உள்ளன. அப்படியானால், நாம் அதன்படி செயற்பட வேண்டும்.

முதலில் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாடாக இருக்க வேண்டும்.

இறையாண்மை, சுயாதீனமான சுதந்திர நாட்டை அச்சுறுத்தும் வகையில் எதுவும் நடக்க இடமளிக்கக்கூடாது. அது எமது முக்கிய கடமை. நாட்டின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க, இந்த நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும்.

நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு 1980ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை அச்சுறுத்தலுக்கு உள்ளானது. அச்சந்தர்ப்பத்தில் முப்படையினரும் பொலிஸாரும் உயிர்த் தியாகம் செய்தே அதனைப் பாதுகாத்தனர்.

ஒற்றையாட்சியைப் பாதுகாக்க வேண்டுமானால், நாட்டு மக்களின் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும்.

நாடு என்ற வகையில் நாம் தனித்துவமாக எழுந்து நிற்க வேண்டுமாயின் சிங்கள, தமிழ், முஸ்லிம், பேர்கர் என அனைத்து மதத்தினரும் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நாம் அனைவரும் எமது கலாசாரத்தையும் மதத்தையும் பாதுகாக்க வேண்டும். அவ்வாறில்லாமல் நாடு பிளவுபட்டால், அது நாட்டின் ஒற்றையாட்சிக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே அமையும்.

அதேபோன்று நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை என்ற நிறுவனங்களினால் இலங்கையின் சட்டபூர்வ தன்மை நிறுவப்பட்டுள்ளது.

சட்டத்துறை இயற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்த நீதித்துறை செயல்படுகின்றது. இந்த அனைத்து நிறுவனங்களாலும் இலங்கையின் அரசியலமைப்பைப் பாதுகாப்பது தொடர்பான விடயங்கள் நடைபெறுகின்றன. எனவே, இந்த நிறுவனங்களைப் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும்.

ஓர் அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றது அல்லது மாற்றப்படுகின்றது. பாராளுமன்றத் தேர்தல் இல்லாமல் ஆட்சி மாற்றம் சாத்தியமில்லை. வீதிகள் என்பது பாராளுமன்றத்துக்கான மாற்றுவழி அல்ல.

கடந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தைப் பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாராளுமன்றம் இல்லாத நாடுகள், அராஜக நாடுகளாக மாறலாம். ஏனெனில், பாராளுமன்றம் இல்லையென்றால், சட்டங்களை இயற்றும் அதிகாரம் இல்லாமல் போய்விடும்.

அதேபோன்று, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாடுகளும் அராஜகமாகின்றன. எனவே, ஒரு நாட்டின் அரசியலமைப்பையும் பொருளாதாரத்தையும் பாதுகாக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

கடந்த சில நாட்களாக, இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு சிறந்த பலா பலன்களைக் கொண்டு வருவதற்காக, வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பல அமைப்புகளுடன் கலந்துரையாடினோம்.

நாடும் நீங்களும் விரைவில் அதன் பிரதிபலன்களைப் பெறுவீர்கள். பொருளாதாரத்தை இழந்தால் நாம் நாட்டை இழப்போம். நாட்டின் அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட அடிப்படை நிறுவனங்கள் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அரசியலமைப்பும் நாடும் ஒன்றாகவே முன்னோக்கிச்செல்கின்றன.அதனைப்பிரிக்கமுடியாது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, இராணுவத் தளபதி, பொலிஸ்மா அதிபர் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## காட்டு யானை தாக்கி...

03ஆம் பக்கத் தொடர்

கல்கமுவ பகுதியைச் சேர்ந்தவரின் சடலம் தற்போது கல்கமுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக எஹெதுவெவ பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கின் பொருளாதார...

03ஆம் பக்கத் தொடர்

செலுத்தப்பட்டது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர் தெளிவுபடுத்திய நிலையில், வடக்கு மக்களின் நல்லிணக்க நகர்வுகளில் சர்வதேசத்தின் பங்களிப்புத் தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகார துணைப் பணிப்பாளர் மாயா சிவஞானம் எடுத்துரைத்தார்.

## இலங்கையில் வருடாந்தம்... 03ஆம் பக்கத் தொடர்

அதேவேளை, ஒன்லைன் மூலமான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இயர்போன் பாவனை அதிகரித்து செவிப்புலன் தொடர்பான நோயுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அது தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றையதினம் உலக கேட்போர் தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், அதனையொட்டி நேற்றைய தினம் சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாடொன்று சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விசேட சத்திர சிகிச்சை மருத்துவர் சந்ரா ஜயசூரியவும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து விளக்கமளித்த டாக்டர் ரவீந்திர கிரிஹேன,

"செவிப்புலன் தொடர்பான நோய் சிலருக்கு பிறப்பின் மூலமே ஏற்படுகின்றது. மேலும், சிலருக்கு அது வளர்ந்து வரும் வயதில் ஏற்படுகின்றது. எவ்வாறாயினும், ஆரம்பத்திலேயே அதற்கு சிகிச்சையளித்து பொருத்தமான கருவியை உபயோகப்படுத்தினால் பாதிப்புகளுக்கு இடமில்லை.

குழந்தை பிறந்து ஒரு மாதத்தில் முதலாவது பரிசோதனையையும் இரண்டாவது அல்லது மூன்றாவது மாதத்தில் இரண்டாவது பரிசோதனையும் 6 மாதங்களுக்குள் மூன்றாவது பரிசோதனையும் மேற்கொள்ள வேண்டும்.

அதன் பின்னர், ஒரு வருடத்துக்குள் உரிய சத்திர சிகிச்சையை மேற்கொண்டு கருவி ஒன்றைப் பொருத்த முடியும். மூளை முற்றி விடுவதற்கு முன்பதாக அந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்வது அவசியமாகும்.

டாக்டர் ருபேரு டொக்லின் பிளான்ட் என்ற சிகிச்சை முறையை ஆரம்பித்து வைத்தார். அது பல வருடங்களுக்கு பயனுள்ளதாக அமையும். அனைத்து ஆஸ்பத்திரிகளிலும் இதற்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படா விட்டாலும் குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அனுராதபுரம், பேராதனை போன்ற அரசாங்க வைத்தியசாலைகளில் இந்த சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று, அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க தயார்

**கோப்பாய் குறூப் நிருபர்**



வட மாகாண உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதற்கு நாம் தயாராகவிருக்கிறோம் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை வடக்கின் நுழைவாயில் என்னும் தொனிப்பொருளில் 13 ஆவது தடவையாக இடம்பெறும் யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இம்முறை யாழில் இடம்பெறும் சர்வதேச கண்காட்சியில் அதிகளவிலான உள்ளூர் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் தென்னிலங்கை உற்பத்தியாளர்களுடன் இணைந்து தமது உற்பத்திகளை அதிகரித்துக் கொள்வதற்கும் சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்கும் இக்கண்காட்சி உதவியாகவிருக்கும் என நம்புகிறேன்.

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நான் ஒன்றை கூற விரும்புகிறேன். அவர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க நாங்கள் தயாராகவிருக்கிறோம். தயக்கமின்றி முன்வாருங்கள். உங்களுக்கான வழிகாட்டலை வழங்க தயாராகவிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கண்காட்சியில் தென்னிலங்கை உற்பத்தியாளர்களின் காட்சிக்கூடங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளூர் உற்பத்திக்கூடங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்.இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெபாஸ்கரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ்ப்பாண தொழிற்துறை மன்ற தலைவர் விக்னேஷ் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# அத்துமீறிய தமிழக மீனவர்களால் பெறுமதியான வலைகள் நாசம்



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் சுழிபுரம் மேற்கு சவுக்கடி கடற்பரப்பில் கடற்றொழிலுக்கு சென்ற மூன்று மீனவர்களின் வலைகள் தமிழக கடற்றொழிலாளர்களின் இழுவைமடி படகுகளால் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக கடற்றொழிலாளர்களின் இழுவை மடிப் படகுகளால் யாழ்ப்பாண கடற்றொழிலாளர்களின் வலைகள் சேதமாக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் மூன்று மீனவர்களின் சுமார் 12 இலட்சம் பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளன. அதுதொடர்பில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களினால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் கைது

யாழ்ப்பாணம் உரும்பிராய், பொக்கனைப் பகுதியில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அதேவேளை அவரது உடைமையிலிருந்து 6 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் பொக்கனைப் பகுதியில் பெண்ணொருவர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அப்பெண்ணை கைது செய்ததுடன் கசிப்பினையும் மீட்டுள்ளனர்.

அதேவேளை அந்த பெண் ஏற்கனவே பல தடவைகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலுள்ள போதிலும் தொடர்ச்சியாக சட்டவிரோத கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருந்தூர் மலை விவகாரம்

# எம்.பிக்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

**மாங்குளம் குறூப் நிருபர்**



குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்படுவதாக பௌத்த துறவிகளால் தொடரப்பட்ட வழக்குக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவித்ததாகத் தெரிவித்து பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம் மற்றும், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 12.06,2022 அன்று குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைத்து வழிபடுவதற்காக அதிகளவான பௌத்த துறவிகள் வந்தபோது கிராம மக்கள், அரசியல் பிரமுகர்கள் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்பின்னர் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவித்ததாகத் தெரிவித்து பௌத்த தேரர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு தொடரப்பட்ட B/688/22 எனும் வழக்கானது நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிபதியால் இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளதும், பொலிசாரினதும் வாதங்களைச் செவிமடுத்த நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்டவர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், ஜூட் நிக்சன் ஆகியோரை தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவித்து உத்தரவிட்டிருந்ததுடன், 02.03.2023 ஆம் திகதிக்கு மேலதிக விசாரணைகளுக்காக திகதியிட்டிருந்தார்.

அந்தவகையில் குறித்த வழக்குவிசாரணை 02.03.2022இன்று நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந் நிலையில் இந்த வழக்கில் சந்தேக நபர்களாக பெயர்குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும், வினோ நோகராதலிங்கம் ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகவேண்டுமென உத்தரவிட்டுள்ளதுடன், குறித்த வழக்கானது எதிர்வரும் 08.06.2023ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மண்டக்கல்லாறு உவர் நீர் தடுப்பணை அபிவிருத்தி துரிதப்படுத்தப்படும்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வைத்தியசாலைக் கட்டடம், மண்டக்கல்லாறு உவர் நீர் தடுப்பணை போன்ற வேலைத்திட்டங்கள் மிகத் துரிதகதியில் அமைக்கப்படுமென ஆளுநரின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

வன்னேரிக்குளம் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அண்மையில் வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கிராமத்தின் அபிவிருத்தி திட்டங்களில் காணப்படும் தாமதம் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர்.

இதன்விளைவாக 54 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ள வன்னேரிக்குளம் வைத்தியசாலைக் கட்டடம் மிக துரிதகதியில் ஒப்பந்தம் கோரப்பட்டு கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

பல தசாப்த கால கோரிக்கையாகவிருந்த மண்டக்கல்லாறு உவர்நீர் தடுப்பணை அமைப்பதில் காணப்படும் தடைகளை ஆராய்ந்து இவ் வேலைத்திட்டமும் துரிதகதியில் ஆரம்பிக்கப்படும் என ஆளுநரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மண்டைக்கல்லாறு திட்டம் 495 மில்லியன் மதிப்பீடுகள் செய்யப்பட்டு நிதி ஒதுக்கப்படாமையால் தற்போது வேலைகள் இடம்பெறாது உள்ளது.

மண்டைக்கல்லாறு திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வன்னேரிக்குளம் கிராம சூழலில் உள்ள சிறிய குளங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் உவர்ப் பரம்பலையும் கட்டுப்படுத்தக்கூடிய சூழல் உருவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் குருதி தட்டுப்பாடு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் குருதி வழங்கல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.,

அந்த அதிகரிப்பிற்கு ஏற்ப குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை எனவும் இதனால் இரத்த வங்கியில் அடிக்கடி இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியவில்லையென இரத்த வங்கி அறிவித்துள்ளது.

கடந்த 28ஆம் திகதி 49 சேகரிப்பும் , 49 வழங்கலும் இடம்பெற்றுள்ளது. 1ஆம் திகதி 17 சேகரிப்பும் 48 வழங்கலும் இடம்பெற்றுள்ளது. 2ஆம் திகதி 33 சேகரிப்பும் 39 வழங்கலும் இடம்பெற்றுள்ளது.

புள்ளி விபரத்தின் படி சேகரிப்பை விட வழங்கல் கூடுதலாக காணப்படுகின்றது. இதனால் நோயாளர்களுக்கு தேவையா ன குருதியை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே இரத்தானம் செய்வதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். இரத்த தானம் செய்பவர்கள் மற்றும் இரத்ததான முகாம்களை ஒழுங்கமைப்பவர்கள் தமது 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

# யாழில் இடம்பெறும் மாபெரும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி





**யாழ். விசேட,கோப்பாய் நிருபர்கள்**

'வடக்கின் நுழைவாயில்' சர்வதேச வர்த்தக சந்தை 13ஆவது தடவையாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 13 ஆவது தடவையாகவும் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரையிலான மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

கண்காட்சிக் கூடத்தினை வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நாடா வெட்டி திறந்து வைத்தார்.

கொழும்பின் பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் இணைத்து யாழ்ப்பாணத்தில் இந்த சந்தை நடைபெறுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் தொழில் நுட்பரீதியில் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவியாகவிருக்கும்.

பல வருடகாலமாக வடக்கின் கைத்தொழிற்துறை வளர்ச்சி மற்றும் சந்தைவாய்ப்பிலிருந்த பாரிய இடைவெளிகள் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் கண்காட்சிகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளது.

250 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 ஆயிரம் பேர் வந்திருந்தனர்.

சுமார் 45 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் பேர் வரை பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

பாடசாலை சீருடையுடன் வருகை தரும் மாணவர்கள் கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கோப்பாய் கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான வீதியோட்டம்







கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான வீதியோட்ட நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலாசாலையின் முன்னாள் அதிபர் வே.க. கணபதிப்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி எஸ்.பரமானந்தம் கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ கருணலிங்கம் லயன் டாக்டர் வி. தியாகராஜா முன்னாள் விரிவுரையாளர் வி. எஸ். குணசீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஆண் ஆசிரிய மாணவர்கள் கலாசாலை முன்றலிலிருந்து புறப்பட்டு இராச வீதி வழியாக நல்லூர் கோவிலை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக இருபாலை சந்தியை அடைந்து கலாசாலையை வந்தடைந்தனர். பெண்ஆசிரிய மாணவர்கள் கலாசாலை முன்றலிலிருந்து புறப்பட்டு இராஜ வீதி வழியாக இராமசாமி பரிகாரி சந்தியை அடைந்து ஆடியபாதம் வீதி வழியாக கல்வியங்காட்டு சந்தியை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக இருபாலை சந்தியை அடைந்து கலாசாலை வாயிலை வந்தடைந்தனர்.






# கழிவுப்பொருட்களால் மாசடையும் சிவனொளிபாதமலை புனித பூமி

## உயிர் பல்வகைமைக்கு அச்சுறுத்தல்



ஹற்றன் விசேட நிருபர்

சிவனொளிபாதமலை யாத்திரை காலப்பகுதியில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளால் அதிகளவில் சூழல் மாசடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவனொளிபாதமலை புனித பூமியில் யாத்திரிகர்கள் பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகளை முறையற்ற விதத்தில் வீசி செல்வதால் உயிரினங்களுக்கும் அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு வருவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பித்து சுமார் இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணிகள் நாளாந்தம் வருகை தருகின்றனர்.

இவ்வாறு சிவனொளிபாதமலை யாத்திரை செய்வதற்காக வரும் உள்நாட்டு யாத்திரிகர்கள் தங்களால் கொண்டு வரப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன்கள் மற்றும் உணவுப்பொருட்கள் ஆகிய கழிவுகளை கண்ட இடங்களில் வீசுவதனால் இன்று பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக புனித பிரதேசங்கள், நீரோடைகளிலும் நீர்நிலைகள் உள்ளிட்ட பகுதிகளிலும் கழிவுப்பொருட்களை வீசுவதனால் நீர் அசுத்தமடைந்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா தொடக்கம் நல்லத்தண்ணி வரை வீதியின் இரு மருங்கிலும் கண்ட இடங்களில் உணவுப்பொருட்களையும் கழிவுப்பொருட்களையும் வீசுவதனால் இதனை உண்பதற்காக காட்டுப் பன்றி, குரங்கு மற்றும் சிறுத்தை போன்ற மிருகங்கள் மக்கள் வாழும் பிரதேசங்களை நோக்கி படையெடுப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். வீதியில் இரவு நேரங்களில் உணவு உண்பதற்காக வன விலங்குகள் வீதிக்கு வருவதனால் வீதியில் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டு வருவதாகவும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுமாத்திரமின்றி பொலித்தீன் உள்ளிட்ட நச்சுப்பொருட்களை மிருகங்கள் உண்பதனால் அவற்றின் உயிருக்கு பேராபத்து ஏற்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் வீசப்படும் குப்பைகள் காரணமாக நீரூற்றுக்கள் வற்றிப்போகும் நிலை காணப்படுகின்றதுடன் நீர் அசுத்தமடைகின்றன.

சுற்றுப்புற சூழலில் வீசப்படும் குப்பை காரணமாக அப்பிரதேசத்திற்கு உரித்தான தாவரங்கள், உயிரிணங்கள் அழிவடையக்கூடிய ஆபத்துக்கள் காணப்படுகின்றன.

குப்பைகளை அகற்றுவதற்காக அரசாங்கம் பாரிய நிதியை செலவு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



வெலிமடை, மிராஹ வத்தை முஸ்லிம் மையவாடியின் புனர் நிர்மாணப் பணிகள் மிராஹவத்தை நலன்புரி அமைப்பினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது மிருகங்கள் உள்நுழையாதவாறு வேலி மற்றும் மழைநீர் வழிந்தோடும் வகையிலான வடிகான் போன்றவை அமைக்கப்பட்டது.
படம்.ஊவா சுழற்சி நிருபர்

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை; நொரகல்ல த.வியில் மூன்று மாணவர்கள் சித்தி



நிவித்திக்கலை கல்வி வலயத்துக்குட்பட்ட நொரகல்ல தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதற் தடவையாக மூன்று மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர் என பாடசாலை அதிபர் பெருமாள் பரமசிவன் கூறினார்.

மிகவும் பின்தங்கிய பிரதேசத்திலுள்ள பாடசாலையில் போதிய வளங்களும் தேவையான ஆசிரியர்களும் இல்லாத சூழ்நிலையில் 3 மாணவர்கள் சித்தியடைந்தமை வரலாற்று சாதனையாகும்.

இப்பரீட்சையில் விஸ்வநாதன் டினுசன் என்ற மாணவன் 175 புள்ளிகள் பெற்று மாகாண மட்டத்தில் (தமிழ்மொழியில்) இரண்டாமிடத்தையும் வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்று சாதனைப்படைத்துள்ளார்.

விஸ்ணுகுமார் அக்ஸயா என்ற மாணவி 147 புள்ளிகளையும் நவரத்தினகுமார் மோக்ஸிதா என்ற மாணவி 144 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களையும் வகுப்பாசிரியை பி.ஹரணியையும் அதிபர் பெருமாள் பரமசிவன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# உற்பத்திச் செலவு அதிகரிப்பு; தேயிலை செய்கையை கைவிடும் நிலை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

தேயிலை பசளை உட்பட ஏனைய உற்பத்தி செலவுகள் அதிகரிப்பால் தேயிலை செய்கையை கைவிடும் நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் தற்போது 30 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படும் தேயிலை பசளை ஏற்கனவே விலை குறைவாக விற்கப்பட்ட பசளையை விட தரக்குறைவானதாக காணப்படுவதாலும் ஏனைய செலவுகள் காரணமாகவும் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்டசிறு தேயிலை தோட்ட உரிமையாளர் சங்க தலைவர் எல்.கெமிலஸ் தெரிவித்தார்.

ஏற்கனவே குறைந்த விலையில் வழங்கப்பட்ட தேயிலை பசளை தரமானதாக இருந்ததாகவும் இதனால் முதல் விளைச்சல் உட்பட மேலும் பல மாதங்களுக்கு அதிக விளைச்சல் கிடைத்ததாகவும் சிறுதேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் தற்போது அதிக விலை கொடுத்து வாங்கும் பசளையால் விளைச்சல் கிடைத்தாலும் இலாபமடைய முடியாத நிலை காணப்படுவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பசளை விலை உட்பட ஏனைய செலவுகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

எனவே நாட்டின் தேயிலை வருமானத்தின் மூன்றில் இரண்டு பங்கை ஈட்டித்தரும் சிறுதேயிலை தோட்ட உற்பத்திகளைக் கைவிடும் நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மஸ்கெலியா புரவுன்சீக் தோட்டத்தில் தேயிலைத்தூள் திருட்டு, இருவர் கைது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆர்.பி.கே. பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா புரவுன்சீக் தோட்டத்தில் நேற்று முன்தினம் தேயிலை தொழிற்சாலையில் தேயிலைத்தூள் திருடப்பட்டுள்ளதாக தோட்ட உதவி முகாமையாளர் கே.எல்.விஸ் வஜித் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார இதுகுறித்து உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன்படி பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது அதே தோட்டத்தைச் சேர்ந்த தேயிலைத் தொழிற்சாலை பழுது பார்க்கும் தொழிலாளி மற்றும் அவரது உறவினர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

மேலும் இவர்களிடமிருந்து தேயிலைத்தூள் 20 கிலோவுடனும் 20 லீற்றர் டீசல் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பணித்துள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

இதுகுறித்து தோட்ட முகாமையாளர் கூறுகையில், இவ்வாறு தேயிலை மற்றும் ஏனைய பொருட்கள் திருடப்படுவதாக தோட்ட நிர்வாகம் ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மாகுடுகலை தோட்டத்தில் மீண்டும் தலைதூக்கும் மது விற்பனை

**உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெண்கள் கோரிக்கை**

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகுடுகலை தோட்டத்தில் 15 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் மதுவிற்பனை தலைத்தூக்கியுள்ளதால் அதனை தடுக்க பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாகுடுகலை தோட்ட பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாகுடுகலை தோட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கு முன்னர், இரு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மது அருந்திவிட்டு மோதலில் ஈடுபட்டனர். அதன்போது அதில் பெண்ணொருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி பலத்த காயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவம் மாகுடுகலை தோட்டத்தை அண்மித்த மாகுடுகலை சிறிய நகர் பகுதியில் அமைந்திருந்த மது விற்பனை நிலையத்தில் மது அருந்திவிட்டு வந்த இரு குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு மது அருந்தி வீடு திரும்பும் ஆண்கள் தங்களின் வீடுகளில் தினமும் சண்டையிட்டு தோட்ட மக்களின் நிம்மதிக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் மாகுடுகலை தோட்டத்தை அண்மித்த சிறிய நகரில் இயங்கி வந்த மது விற்பனை நிலையத்தை மூடிவிட வேண்டும் என இத்தோட்டத்தில் வசித்து வந்த இரு பெண்கள் முன்னெடுத்த முயற்சியினால் இதற்கு ஆதரவு வழங்கிய தோட்ட பெண்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து போராட்டத்தை மேற்கொண்டு மதுபான விற்பனை நிலையத்தை மூடிவிட்டனர்.

அன்றிலிருந்து 15 வருடங்களாக மாகுடுகலை தோட்டத்தில் மது பாவனை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு தோட்ட மக்களின் குடும்பங்கள் நிம்மதியாக வாழ்க்கையை நடத்தி வந்ததாக தோட்டப் பெண்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் தோட்டத்தில் மூன்று நபர்கள் சட்டவிரோதமாக மது விற்பனையைச் செய்கின்றனர். மது விற்பனை லயன் குடியிருப்பு வீடுகளில் இடம்பெறுவதாக தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக வியாபாரிகளின் வீடுகளுக்கு, இரவு வேளையில் மது அருந்த வரும் நபர்கள் அங்கு மது அருந்திய பின் கூச்சல் இடுவது, அநாகரிகமாக நடந்துக்கொண்டு தகாத வார்த்தைகளை பிரயோகிப்பது, அத்துடன் சண்டைகள் போட்டுக் கொள்வது போன்ற செயல்களில் ஈடுபடுவதாக தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள், நோயாளிகள் என பலரும் நிம்மதி இழந்து வருவதாகவும், பெண்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதுதொடர்பாக இராகலை மற்றும் ஹய்பொரஸ்ட் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் உரிய நடவடிக்கைகள் எடுக்க பொலிஸார் தவறி வருவதால் தோட்டத்தில் சட்டவிரோத மதுவிற்பனை வலுவடைந்து வருவதாகவும் தோட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மாகுடுகலை தோட்டத்தில் குடும்பங்கள் நிம்மதியாக வாழவும், சமூக சீர்கேடுகளில் இருந்து தோட்ட மக்களை பாதுகாக்கவும்,மாணவர்கள் நிம்மதியாக கல்வி கற்கவும் வழிசமைக்க வேண்டுமென தோட்ட பெண்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

தோட்டத்தில் தலைதூக்கியுள்ள மதுவிற்பனையை தடைசெய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மாகுடுகலை தோட்டப்பெண்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆ.ரமேஸ்

# கட்டாக்காலி மாடுகளால் பொதுமக்கள் விசனம்

ஊவா சுழற்சி நிருபர்

பண்டாரவளை மாநகரின் மத்தியில் திரியும் கட்டாக்காலி மாடுகளால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக பாதசாரிகளும் சாரதிகளும் தெரிவிக்கின்றனர்.

மாநகரின் மத்தியில் ரவுண்ட போட், ஜும்மா மஸ்ஜித் முன்னும் மாநகர சபை வீதி முதல் நலின் பியந்த சூரியகே மைதானம் வரையிலான வீதிகள் மாத்திரமன்றி பிரதான வீதியில் பாதசாரிகள் கடக்கும் வீதிக்கடவையிலும் காலை முதல் மாலை வரை கட்டாக்காலி மாடுகள் இடையூறு விளைவிக்கும் வகையில் சுற்றித்திரிவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகள் விசனம் தெரிவித்து வருகின்றனர். இதுதொடர்பில் மாநகர சபையினர் உரிய கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களை கண்டுபிடித்து தண்டப்பணம் அறவிட வேண்டுமென எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கட்டாக்காலி மாடுகள் மாநகரசபை முன் வீதியிலிருந்து பள்ளிவாசலுக்கு முன்னுள்ள வீதிக்கடவையினூடாக செல்வதை படத்தில் காணலாம்.



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாத்தளை இஸ்மாலியா முஸ்லிம் வித்தியாலய மாணவி எப். ஹிக்மா 145 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார்
(படம் மாத்தளை சுழற்சி நிருபர்)

# ரி–56 ரக துப்பாக்கி மற்றும் இரண்டு மகஸின்களை திருடி விற்க முயன்ற விமானப்படை வீரர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

சீகிரிய விமானப்படை முகாமில் திருடியுள்ள ரி56 ரக துப்பாக்கி மற்றும் இரண்டு மகஸின்களையும் நாலரை இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்றுள்ள விமானப் படை வீரரொருவரை குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள் தம்புள்ளை பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்த நபரிடம் பெறப்பட்டுள்ள தகவல்களையடுத்து தம்புள்ளை ரிதியகம பகுதியில் ஒளித்துவைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி துப்பாக்கியும் மகஸின்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்ட மேற்படி நபர், சீகிரிய விமானப்படை முகாமில் பணியாற்றியுள்ளதுடன் கடந்த வருடத்தில் அவர் இந்த துப்பாக்கி மற்றும் ரவைகளை திருடியுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பொலிஸார் கடந்த வருடம் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி குறித்த விமானப்படை வீரர் வீதிச்சோதனைச் சாவடியொன்றில் கடமையிலீடுபட்டிருந்த விமானப்படை வீரரின் துப்பாக்கியையும் மகஸின்களையும் களவாடிச் சென்றுள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிலோன் டீ என்ற நாமத்திற்கு தற்போது களங்கம் ஏற்பட்டுள்ளது

**மத்திய மாகாண தேயிலைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்க முன்னாள் தலைவர் ரொபட் ஹாலி**

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

எமது நாட்டின் தேயிலைத்தொழில் சிறு வியாபாரிகளின் கைகளுக்குள் சென்றமையினாலேயே சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்கு பெருமையை தேடித்தந்த சிலோன் டீ என்ற நாமத்திற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக மத்திய மாகாண தேயிலைத்தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்க முன்னாள் தலைவர் ரொபட் ஹாலி தெரிவித்தார். அறிவிற்கு கைகோர்ப்போம் கல்விக்கு உரமூட்டுவோம் என்ற பெயரில் வசதி குறைந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வருடாந்த கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கம்பளை குறுந்துவத்தை தேயிலைத் தொழிற்சாலையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் பொழுது அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் பேசுகையில். வெள்ளைக்காரர்கள் எமது நாட்டில் ஆரம்பித்து வைத்த தேயிலைத் தொழிற்றுறையால் பாரியளவு அன்னியச் செலாவணி எமது நாட்டுக்கு கிடைத்தது. அவர்கள் தேயிலைத் தொழிற்றுறையில் காட்டிய செயற்திட்டம் நேர்மையும் விரைவு காரணமாக செல்வந்த நாடுகளில் சிலோன் டீ என்ற நாமம் கல்வெட்டாக பதிந்திருந்தது. அதற்கு எமது தேயிலையின் தரமும் சுவையும் குணமும் நிறைந்து காணப்பட்டமையே காரணம். ஆனால் இன்று தேயிலைத் தொழிற்றுறை பணத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்ட சிலரிடம் சிக்கிக் கொண்டுள்ளது. அதனால் அவர்கள் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களை உண்டாக்க விஷத்தன்மை வாய்ந்த பதார்த்தங்களை கலந்து விரைவாக பணம் சம்பாதிக்கக் கூடிய வழிமுறைகளை கண்டுபிடித்துள்ளனர். அதனால் சர்வதேசரீதியில் எமது நாட்டு தேயிலை சிலோன் டீ என்ற பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றார்

# கிழக்கின் குரல்



## கல்முனை மாநகர சபை நிதிமோசடி; புதிய ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது



மாநகர சபை முதல்வர்

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற நிதிமோசடி தொடர்பான விடயங்களை தவறாக பலர் பரப்பிவருகின்றார்கள் என கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பு வியாழக்கிழமை(2) இரவு கல்முனை மாநகர சபை பொது மண்டபத்தில் இடம்பெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப்பின் கருத்து,..

கல்முனை மாநகர சபையில் நிதிக்கையாடலில் ஈடுபட்ட ஊழியர்கள் தொடர்பாக புதிய ஆதாரம் தற்போது சிக்கியுள்ளது.இந்த விடயம் தொடர்பில் பின்னணியில் யார் இருப்பினும் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.இதற்கமைய ஆணையாளர் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு நிதிக் கையாடல் சம்பவங்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ரோசன் அக்தர்,..


மாநகர சபையில் இடம்பெற்ற நிதிக்கையாடல் விடயங்களை பொதுவெளியில் பேசுவதை தவிர்த்து ஆக்க பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்க வேணடும். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் சிலர் காழ்ப்புணர்ச்சியினால் பொதுவெளியில் பேசி வருகின்றனர் என்றார்.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.சி சத்தார் கருத்து,..

எமது கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற நிதிமோசடி தொடர்பான விடயங்களை தவறாக பலர் பரப்பிவருகின்றார்கள். ஆனால் மாநகர சபையில் ஒரு நிதிக் கையாடல் இடம்பெற்றிருக்கின்றது. எமது மாநகர நிதிப்பிரிவில் இருந்த ஊழியர்களினால் இடம்பெற்றுள்ளது.இந்த ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட இச்செயற்பாட்டில் எமது முதல்வருக்கோ எமது உறுப்பினர்களுக்கோ எவ்விதமான சம்பந்தமும் இல்லை.

இச்செய்தியாளர் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் உறுப்பினர்களான சட்டத்தரணி ரோசன் அக்தர் ஏ.சி சத்தார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## தமிழ் மக்களுக்கு குறைந்த பட்ச அதிகாரமாவது 13 ஆவது சீர்திருத்த சட்டத்தின் மூலம் கிடைக்க வேண்டும்



**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

தமிழ் மக்களின் குறைந்த பட்ச அதிகாரமாவது இந்த 13 ஆவது சீர்திருத்த சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற வேண்டும் என்பதில் எமது கட்சி மிகவும் உறுதியாக உள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் பணிகள் 65% முடிவுற்ற நிலையில் இத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ. பிரசாந்தன் தமது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (3)இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்...

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இவ்வாறான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமா? என்பது சம்பந்தமான விவாதங்கள் ஒருபுறம் இருந்தாலும் அறிவிக்கப்பட்ட தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.அதே போல் கடந்த நல்லாட்சி காலத்திலும் எல்லை நிர்ணயம் என்று இழுத்தடிக்கப்பட்ட மாகாண சபை தேர்தல் இன்று வரை நடாத்தப்படவில்லை. அதனால் இன்று பெரிய பாதிப்புகளை நாம் சந்தித்து வருகின்றோம். சில இனவாத கட்சிகள் இவ்வாறான மாகாண சபைகள் தேவையில்லை என்ற அளவுக்கு இன்று ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் அகிம்சை போராட்டம் எல்லாவற்றையும் இழந்து தற்போது இந்த 13 வது தேர்தெடுத்த சட்டத்திலாவது எமக்கு விமோசனம் கிடைக்க வேண்டும் என்பதில் நாம் மிக உறுதியாக உள்ளோம்.

## அட்டாளைச்சேனையில் தலைமைத்துவப் பயிற்சியும் தொழில் வழிகாட்டல் செயலமர்வும்

**சாய்ந்தமருது விசேட நிருபர்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அட்டாளைச்சேனைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், எக்ஸ்டோ ஸ்ரீலங்கா, அவரோன் செரிடி சமூக சேவைகள் அமைப்பு போன்றவற்றுடன் இணைந்து லேக் ஹவுஸ் தினகரன் பத்திரிகை மற்றும் வாரமஞ்சரி இணைந்து நடாத்தும் தலைமைத்துவப் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை (06) காலை 08.30 மணிக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் அவரோன் செரிட்டி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நஸாத் சம்சுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் பாத்திமா நஹிஜா முசாபீர் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் கங்கா சாதுரிக்கா மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண காரியாலயத்தின் உதவிப் பணிப்பாளர் யூ.எல்.அப்துல் மஜீத் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகை மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ரி. செந்தில் வேலவர் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.முபாரக் அலி மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம். நளீல் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய இளைஞர் கழக சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவர், சட்டக் கல்லூரி மாணவர் விரிவுரையாளர், இணைப்பாளர் கலைமாணி கற்கை நெறி (அரசியல்) திறந்த பல்கலைக்கழகம் ஏ.ஆர். அஸ்லாம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம். றியாத் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஷர்ஃபான் ஆகியோர் அழைப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் செயலமர்வில் 15 வயது தொடக்கம் 29 வயதுக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொள்ள முடியும். அவ்வாறு கலந்து கொள்ள விருப்பமுள்ள இளைஞர், யுவதிகள் பின்வரும் கூகுள் https://forms.gle/J5jxqc48nGf6u7439 படிவத்தினைப் பூரணப்படுத்தி இன்று (05) சனிக்கிழமை மாலை 06.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் ஏ.சீ.எம்.றிப்கான் கேட்டுள்ளார்.



அண்மையில் பதவி உயர்வு பெற்ற, இலங்கை இராணுவத்தின் 24வது படைப்பிரிவு கட்டளைத் தளபதி விபுல சந்திரசிறி, அம்பாறை மாவட்ட சிவில் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் பாராட்டி கௌரவிப்பட்ட போது. படம்: அட்டாளைச்சேனை மத்திய நிருபர்



நெதர்லாந்து நாட்டில் இயங்கி வரும் சிலோன் கிறிஸ்டியன் கெயார் (Ceylon Christian Care) நிறுவனத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் நம்பிக்கையின் ஏணி (Ladder of hope) நிறுவனத்தின் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட போது.

படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

## பட்டியடிப்பிட்டி குடியிருப்பு பகுதியில் அதிகாலை காட்டு யானைகள் அட்டகாசம்





**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட பட்டியடிப்பிட்டி மக்கள் குடியிருப்பு பிரதேசத்தில் காட்டு யானைகள் சில நேற்று(03) அதிகாலை உட்புகுந்து பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் உட்புகுந்த இக்காட்டு யானைகள் வீடுகள் மற்றும் பாடசாலை போன்றவற்றின் சுற்று மதிற்சுவர்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன் பயன் தரும் பல மரங்களையும் நாசம் செய்துள்ளன.

இக்காட்டு யானைகள் பல தென்னை மரங்களை உடைத்து நாசப்படுத்தியுள்ளதுடன், நீண்ட காலம் பயன்தரக் கூடிய பல்வேறு பழ மரங்கள் போன்றவற்றையும் தேசப்படுத்தியுள்ளன. இக்காட்டு யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் உட்புகுந்து பல்வேறு சேதங்களை உண்டு பண்ணும் காணோளிக் காட்சிகளும் சில பாதுகாப்புக் கமராக்களில் பதிவாகியுமுள்ளன.

இதேவேளை, மேட்டு நிலப் பயிர்கள் மற்றும் மரம், செடி, கொடிகள் பலவற்றையும் இக்காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன. இரவு வேளைகளில் காட்டு யானைகள் பல இப்பிரதேசத்தில் நடமாடுவதால் பல்வேறான இன்னல்களுக்கு தாம் தினமும் முகம் கொடுத்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சீனாவினால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோகம்



**ரொட்டவெவ குறூப் நிருபர்**

இந்நாட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்காக சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட எரிபொருளை விநியோகிக்கும் உத்தியோகபூர்வ வைபவம் (02) திருகோணமலை குச்சவெளி எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

சீன அரசாங்கம் வழங்கிய மொத்த எரிபொருளில் திருகோணமலை மாவட்ட விவசாய குடும்பங்களுக்கு 03 இலட்சம் லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் விவசாயிகளுக்கு எரிபொருள் பெறுவதற்காக வழங்கப்பட்ட கூப்பன்களை சீனத் தூதுவர் மற்றும் ஆளுநர் ஆகியோர் விநியோகித்தனர்.

இதனையடுத்து ஆளுநரும் சீனத் தூதுவரும் பல விவசாயிகளுக்கு எரிபொருளை பகிர்ந்தளித்தனர்.

## சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ் வித்தியாலயத்தில் முப்பெரும் விழா

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கோட்டத்திற்குட்பட்ட சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் (ஜீ.எம்.எம்.எஸ்) முப்பெரும் விழா சாய்ந்தமருது

லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் பாடசாலையின் கல்வி சார் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவம், பாடசாலைக்கான இணையத்தள அங்குரார்ப்பணம், ஆங்கில ரெயின்போ சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு என முப்பெரும் விழாவாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் இல்லியாஸ் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வுக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாகவும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## கடலில் இருந்த பாரிய ஆழ்கடல் படகு விபத்து

**காரைதீவு குறூப் நிருபர்**



காரைதீவுக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆழ்கடல் பாரிய படகு நேற்று முன்தினம் (2) வியாழக்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானது.

காரைதீவைச் சேர்ந்த எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவரின் பாரியப்படகே இவ்விதம் கடலில் சேதத்திற்குள்ளாகியது.

சேதம் எதனால் ஏற்பட்டது என்பது தொடர்பாக இன்னும் தெரியவில்லை.

விபத்துக்குள்ளான படகு கடலுக்குள் மூழ்கிய வண்ணம் இருந்தது. .இதனை அறிந்த படகு உரிமையாளர் மற்றும் காரைதீவு கடற்படையினர் இணைந்து படகை மீட்கும் பணியில் ஈடுபட்டனர் .

அதை வேளையில் மூழ்கிக் கொண்டிருந்த படகில் இருந்த ஒரு தொகுதி வலை மற்றும் ஒரு படகால் கட்டியிழுத்து வரப்பட்டு ஜேசிபி கனரக வாகன உதவியுடன் கரைக்கு நண்பகல் அளவில் கொண்டு வரப்பட்டது.

விபத்து தொடர்பாக காரைதீவு பொலிசிலும் கடற்றொழில் அலுவலகத்திலும் முறையிடப்பட்டிருக்கின்றது.



மலேசியாவின் தூதரகத் தூதுவர் சரவண குமார் குமாரவாசகம் 28 ஆம் திகதி இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரனை மரியாதை நிமித்தம் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பான விடயங்கள் பரிமாறப்பட்டன.

காஷ்மீரில் மகளிர் மட்டும் கலந்து கொண்ட

# மகளிர் பனிக் கிரிக்கெட்

மகளிர் கலந்துகொண்ட பனி கிரிக்கெட் போட்டி காஷ்மீரில் முதல் தடவையாக கடந்த மாதம் நடைபெற்றது.

இப்போட்டியில் நான்கு மகளிர் அணிகள் கலந்து கொண்டன. பத்தாயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் மகளிர் பனி கிரிக்கெட்டை பார்த்து ரசித்தனர்.

காஷ்மீரின் பனிக் காலத்தில் ஆண்கள் கலந்து கொள்ளும் பனி கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். மகளிர் மட்டும் கலந்து கொள்ளும் பனி கிரிக்கெட் போட்டி இப்போதுதான் வட காஷ்மீரின் குப்வாரா நகரில் நடைபெற்றது. பெண்கள் பனி கிரிக்கெட் ஆட்டத்துக்காக தம்மை தயார்படுத்தி ஆர்வமுடன் கலந்து கொண்டமை விளையாட்டுகளில், அவர்கள் கொண்டிருக்கும் விருப்பத்தையே வெளிப்படுத்துகிறது என்று ஒரு போட்டி அமைப்பாளர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். காஷ்மீரில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் அதிக அளவில் பார்வையாளர்களாக கலந்து கொள்வதாகவும் இவர் மேலும் குறிப்பிட்டார்.

பனி கிரிக்கெட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பது தனது கனவாக இருந்ததாகவும் தற்போது அது நனவாகி இருப்பதாகவும் ஒரு பெண் வீராங்கனை தெரிவித்தார்.

# பூட்டானில் சிறுவர் கணினிக் கல்விக்கு முக்கியத்துவம்

பூட்டான் ஆரம்ப வகுப்பு மாணவ மாணவியர் கணினி குறியீட்டு அறிவு கொண்டவர்களாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கணினி கோர்டிங் கல்வி, முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை கற்பிக்கும் நடைமுறை 2021ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இக்குறியீட்டு கல்வியை ஒரு பொழுதுபோக்கு அம்சமாகக் கற்கச் செய்யும் 'கோர்ட் மங்கி' கல்விமுறை அதே ஆண்டு மன்னரால் அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது பூட்டான் கல்வி அமைச்சு 'கோர்ட் மங்கி' கற்கை அடிப்படையில் போட்டியொன்றை நடத்தியுள்ளது. இப்போட்டியில் 157 மாணவர்கள் கலந்து கொண்டதாக தெரிவித்திருக்கும் அமைச்சு, வெற்றி பெற்ற மாணவரை அரசரே அறிவிப்பார் எனக் கூறியிருந்தது.

'கோர்ட் மங்கி' கற்பித்தல் முறையின் கீழ் கோர்டிங் முறைகளை சுலபமாகக் கற்க முடிவதாகவும் எதிர்காலத்தில் கணினி நிபுணராக, புரோகிராமராக தம்மால் தொழில் செய்ய முடியும் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மணிப்பூரில் நடைபெற்ற வான்வெளி சாகசங்கள்

உஷ்ண காற்று பலூன் மற்றும் பாரா மோட்டர் உதவியுடன் பறக்கும் சாகசம் என்பனவற்றை உள்ளடக்கிய வட கிழக்கு வான்வெளி கண்காட்சி மணிப்பூர் பூப்பாலாவில் நடைபெற்றது. இந்திய இராணுவத்தின் தொழில்நுட்ப உதவியுடனும் மணிப்பூர் வான்வெளி விளையாட்டு சங்கம், மணிப்பூர் சுற்றுலாத்துறை அனுசரணையிலும் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இறுதி நாள் வைபவத்தில் கலந்து கொண்ட முதலமைச்சர் என். பிரன் சிங், மணிப்பூரில் வான்வெளி விளையாட்டுக்களுக்காக ஒரு நிரந்தர இடமொன்றை ஏற்படுத்துவேன் என்று தன் உரையில் குறிப்பிட்டதோடு சவால் மிக்க விளையாட்டுக்களுக்கு மணிப்பூர் பொருத்தமான இடமென்றும் இம் மாநிலம் சுற்றுலாவுக்கான சிறந்த இடமாகத் திகழ்வதாகவும் கூறினார்.

ஜி20 உச்சி மாநாடு தொடர்பான நிகழ்வுகள் மணிப்பூரிலும் நிகழவுள்ளதால் அதற்கான ஏற்பாடுகளை நேரில் பார்வையிட்ட முதல்வர், தூதுக்குழுவினர் வருகை தரவுள்ள லொக்டக் ஏரியைச் சுற்றிலும் செய்யப்பட்டுள்ள அலங்காரங்களைப் பார்வையிட்டார்.

பிரச்சினைகள் மிகுந்த மாநிலமாக விளங்கிய மணிப்பூர் தற்போது அமைதியான மாநிலமாகவும் உல்லாச பயணிகளை அதிகளவில் ஈர்க்கக்கூடிய இடமாகவும் மாறி வருகிறது.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் பட்டயச் சான்றிதழ் கற்கை நெறி ஆரம்பம்

நமது சமூகத்தில் தமிழறிவின் தரம் மிகவும் வீழ்ச்சியடைந்துவிட்டதாக பலராலும் உணரப்படுகின்ற நிலையில் தமிழ்மொழி, இலக்கியம் என்பன தொடர்பான அறிவுடையவர்களை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கோடு கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பட்டயச் சான்றிதழ் கற்கை நெறி ஒன்றினை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

இக்கற்கைநெறி ஓராண்டுப் பாடநெறியாக (வார இறுதி நாட்களில் மாத்திரம்) நடைபெறும். பாடவிதானமும் தயாரிக்கப்பட்டுள்ளது. கற்பிப்பதற்காக தகைசான்றவர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்தும் வெளியிலிருந்தும் வரவழைக்கப்படுவார்கள்.

இக்கற்கை நெறியில்

1. பிரயோக இலக்கணம்
2. இலக்கிய நயப்பும், விமர்சனமும்
3. பழந்தமிழ் இலக்கியங்கள்
4. இடைக்காலத் தமிழிலக்கியங்கள்
5. நவீன தமிழிலக்கியங்கள்
6. மொழித்திறன்
7. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு
8. அயல் மொழிகள்

ஆகியவை பாடப்பரப்புக்களாக அமையும்.

பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள், ஊடகத்துறை சார்ந்தவர்கள், தமிழில் உயர்கல்வி கற்பவர்கள், உயர் தமிழ் அறிவில் ஆர்வமுடையவர்கள் என்று இன்னோரன்னவர்களுக்குஇப்பாடநெறி பயனுடையதாக அமையும். பாடநெறியில் சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :
பொதுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல 7, சங்கம் ஒழுங்கை,
கொழும்பு 06.

என்ற முகவரிக்கு நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை 2023.03.20ம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும். கற்கை நெறி 2023.04.01ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அனுமதிக் கட்டணம் ரூபா 2000.00 விண்ணப்பப்படிவத்துடன் அனுமதிக்கான கட்டணம் அறவிடப்படும்.

கற்கைநெறிக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் 011 2363759,
Whatsapp / புலனம் 0766364457,
ஈ.மெயில் tamilsangamcolombo@yahoo.com, tamilsangamcolombo@outlook.com

# ராஜகிரியவில் போதைப் பொருளுடன் ஒருவர் கைது



ராஜகிரியவைச் சேர்ந்த 21 வயது நபரொருவரை அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினர் ஹெரோயின் போதை பொருளுடன் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின்படி ராஜகிரிய, இல. எப்/41 வீட்டின் முன் சோதனை நடத்தியதில் 9,750 மில்லிகிராம் ஹெரோயின் போதை பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

# தெமட்டகொட சமிந்தவின் சகா கைது

தெமட்டகொட சமிந்தவின் மகனுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த ஒருவர் ஹெரோயினுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் சோதனை நடத்தப்பட்டதில் 25 கிராம் 620 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த, மாளிகாவத்தையைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக தெமட்டகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் போது, அவர் தற்போது சிறையில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான சிறிநாயக்க பத்திரனாலகே சமிந்த ரவி ஜயநாத் அல்லது போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள தெமட்டகொட சமிந்தவின் மகன் மலிஷா ஆகாஷ் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பது தெரியவந்துள்ளது.

கண்டி தமிழ் வர்த்தக சங்க தலைவரின் மறைவுக்கு

# கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத் தலைவர் அனுதாபம்

மாவத்தகம தினகரன் நிருபர்

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அமரர் தேசயமான்ய ஆர். அன்பழகனின் மறைவுக்கு கண்டி முஸ்லிம், தமிழ், சிங்கள வர்த்தக சமூகத்திற்குப் பெரும் பேரிழப்பாகும் என்று கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் எம். எச். சலீம்டீன் மற்றும் செயலாளர் ஏ.சி. எம். ரஹ்மான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அமரர் தேசமான்ய ஆர். அன்பழகன் தனது 66 ஆவது வயதில் இயற்கை மரணம் எய்தினார். அந்நாரது மரணம் குறித்து கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் செயலாளர் ஆகியோர் இருவரும் சேர்ந்து கூட்டாக விடுத்துள்ள அனுதாபச் செய்தில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

பிறந்தோம், வாழ்ந்தோம், இருந்தோம்என்றில்லாமல்அடுத்தவர்களுக்குத் தொண்டாற்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய பல்லின மக்கள் மனதிலும் நீங்காத இடம்பிடித்த ஒரு நல்ல மனிதர் என்று பேசப்படும் மனிதராக வாழ்ந்தவர் அன்பழகன் என்று குறிப்பிடலாம்.

சிங்கள வர்த்தக சங்கம், முஸ்லிம் வர்த்தக சங்கம், தமிழ் வர்த்தக சங்கம் ஆகிய மூன்று சங்கங்கள் ஒருங்கிணைந்து கண்டி வாழ் பல்லின சமூகத்திற்கு ஆற்றிய தொண்டு எண்ணற்றவை. இவர் இச்சங்கங்களுடன் இணைந்து கொரோனா தொற்றுக் காலத்திலும், ஏனைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்திலும் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவராக இருந்து கொண்டு சமூக ஒற்றுமைக்காகவும், சமூக மேம்பாட்டுக்காவும் இறுதி வரை அயராது பாடுபட்ட ஒரு நல்ல மனிதர்.

இவர் இனம், மதம், மொழி பிரதேசம் என்று பார்க்காமல் மனிதாபிமானப் பணி புரிபவர். கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் முஸ்லிம் வர்த்தக சங்கமும் வரலாற்றில் முதல் தடவையாக இணைந்து பேராசிரியர் சாதியா பௌஸர் எழுதிய இரு நூல்களையும் கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் வெளியிட்டு வைத்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இத்தகைய நல்ல மனிதருடன் கூட்டாக இணைந்து பல்வேறு சமூகப் பணிகளைப் புரிந்தோம் என்ற வகையிலும் அவர் பிரிவால் துயருற்றுள்ள அந்நாரது குடும்பத்தினர்கள், நண்பர்கள், தமிழ், வர்த்தக சங்கம் உள்ளிட்ட அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



கம்பஹா மாவட்டத்தின் களனி வலயத்திற்கு உட்பட்ட வெலேகொட முஸ்லிம் வித்தியாலயத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் மூன்று மாணவிகள் திறமை சித்தியடைந்துள்ளனர். R.F. சஹிதா (154) M.A. ஹபீபா (161) M.N.F.முன்ஷிபா (153) I.H.பாரூக் (அதிபர்) திருமதி.J.வெங்கடாசலம் (வகுப்பாசிரியை) ஆகியோரை படத்தில் காணலாம்.

# பூட்டானில் புதிய களியாட்ட நகரம்

மலை ராஜ்ஜியமான பூட்டான், திம்பு மற்றும் பாரோ நகரங்களில் காணப்படும் வசதிகளை ஒத்த நவீன வசதிகளை பூன்ஷொக்லிங் நகரிலும் ஏற்படுத்தியுள்ளது. உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் இவை அமைந்திருப்பதாகவும் நகரின் வருவாயை அதிகரிக்க இது உதவும் என்றும் நகர மக்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

திறந்தவெளி அரங்கு, அடுக்கு மாடி வாகன நிறுத்த வசதி, வகை வகையான உணவகங்கள், சிறுவர் களியாட்டப் பூங்கா, விற்பனை நிலையங்கள் என பூட்டான் மன்னரின் உத்தரவுக்கு அமைய இந்நகரில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நாட்டின் பொழுதுபோக்குக்கான நகரம் என இது அழைக்கப்படும் என பூட்டான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் திறப்பு விழாவின்போது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் சமுகமளித்திருந்தனர்.



டாக்டர். ஜனகன் விநாயகமூர்த்தி, அழகியல் கலை பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் இலங்கை ஒளிபரப்பான VAPA TVயின் வர்த்தக கூட்டுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். துணைவேந்தர் அலுவலகத்தில் பல்கலைக்கழக துணைவேந்தருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த நிகழ்வில் VAPA TV நிர்வாக குழு மற்றும் பல்கலைக்கழக நிர்வாக குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# கைவிடப்பட்ட நீரேந்து பிரதேச விவசாயக் காணிகளில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

ஏ.எல்.எம். அதாஉல்லா எம்.பி

(ஒலுவில் விசேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் கைவிடப்பட்ட நீரேந்து பிரதேச விவசாயக் காணிகள், விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

உணவு உற்பத்தி மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் திட்ட அமைச்சர் சசிந்திர ராஜபக்ஷ தலைமையில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். கல்லோய திட்டம் மூலம் நீரேந்து பிரதேசமாக காட்சி தரும் சம்புக்களப்பு காணி அதன் வடிச்சல் தொடர்பாகவும் முறையற்ற மனித நடத்தைகள் மூலம் தில்லையாறு ஒடுங்கியதனால் வெள்ள அபாயம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

இதன் மூலம் சுமார் 70 வருட கால சம்புக்களப்பு சதுப்பு நில விவசாயக் காணிகள் நிரந்தரமாக பயிர் செய்கை செய்யக் கூடிய விவசாயக் காணிகளாக மாறுவதற்கான சாத்தியங்கள் உருவாகியுள்ளதாகவும் கூறினார்.

மத்தியரசு மற்றும் மாகாண சபை மூலம் 2012ம் ஆண்டில் அட்டாளைச் சேனையில் சம்புகளப்பு அகழும் பணியினை தொடங்கப்பட்டது, அந்த பணிகளை செய்வதற்கான இயந்திரம் அக்கரைப்பற்று மாநகர சபையில் உள்ளது அதற்கான எரிபொருட் செலவினை நீர்ப்பாசனத் திணைக்களம் வழங்குவதன் மூலம் சம்புக்களப்பு பிரச்சினை நிரந்தரமாக தீர்ந்துவிடுமெனவும் தெரவித்தார்.

# சிறுமி துஷ்பிரயோகம்; சிறிய தந்தை கைது

ரொட்டவெவ குறூப் நிருபர்

12 வயது சிறுமியை கர்ப்பிணியாக்கிய சிறிய தந்தையை எதிர்வரும் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கெப்பித்திக்கொள்ளாவ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் ஹொரவ்பொத்தான ஒலுகஸ்கட பகுதியைச் சேர்ந்த ஜயசூரிய ஆராய்ச்சிலாகே சமன் ஸ்ரீ (45வயது) எனவும் ஹொரவ்பொத்தான பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, திருகோணமலை மஹதிவுல்வெவ, திம்பிரிவெவ பகுதியைச் சேர்ந்த 12 வயது சிறுமி தனது தாயாருடன் சிறிய தந்தையின் வீட்டுக்கு கடந்த 2022 9ஆம் மாதமளவில் சென்றுள்ளார்.

வயிற்று வலி காரணமாக மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமியை விசாரணை செய்த போது சிறிய தந்தையினால் கற்பழிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இதே நேரம் சிறுமியை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது சிறுமி கர்ப்பிணியாக இருப்பது தெரியவந்துள்ளதுடன்,குறித்த சிறுமியை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதே நேரம் சிறுமி வழங்கிய வாக்குமூலத்தை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட ஹொரவ்பொத்தானசிறுவர்மற்றும்பெண்கள் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு இருந்த நிலையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது எதிர்வரும் 14 ஆம் தேதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதே நேரம் பாதிக்கப்பட்ட குறித்த சிறுமி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி அமைச்சு Microsoft உடன் இணைந்து முன்னெடுக்கும் Imagine Cup Junior 2023




Microsoft Imagine Cup Junior 2023 போட்டிக்கான விண்ணப்பங்கள் 13 முதல் 18 வயது வரையான பாடசாலை மாணவர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நான்காவது வருடாகவும் Imagine Cup Junior 2023 முன்னெடுக்கப்படுவதுடன் சிறுவர்களுக்கு தொழில்நுட்பம் பற்றி அறிந்து கொள்ளவும் உலகின் பாரிய சவால்களை தீர்ப்பதற்கு அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி அறிந்து கொள்ளவும் உதவியாக அமைந்திருக்கும்.

மாணவர்களுக்கு AI for Earth, AI for Health, AI for Accessibility, AI for Humanitarian Action மற்றும் AI for Cultural Heritage ஆகிய ஐந்து பிரிவுகளில் ஒன்றில் போட்டியிட முடியும் என்பதுடன் அவர்களின் சிந்தனைகளை செயற்படுத்துவதற்கு Microsoft நிபுணர்களினால் வழிகாட்டல்கள் வழங்கப்படும். விண்ணப்பங்களை



சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2023 மே மாதம் 13 ஆம் திகதி ஆகும்.

இந்தப் போட்டி தொடர்பில் பாடசாலை அதிபர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வை Microsoft அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேமஜயந்த கருத்துத் தெரிவிக்கையில் "புதிய அறிவையும் தகவல்களையும் துரிதமாக ஏற்படுத்தி மாற்றமடைந்து வரும் உலகுக்கேற்ப மாறிக் கொள்வதற்காக நாம் வினைத்திறனான வகையில் செயலாற்ற வேண்டும். எமது எதிர்கால சந்ததியினருக்கு இந்த துரிதமாக மாற்றமடையும் சூழலுடன் இயங்கக்கூடிய வகையில் சரியான கல்வி தொழில்நுட்பம் மற்றும் திறன்களை வழங்குவது முக்கியமானதாகும். எமது ஆசிரியர்களின் திறன்களை கட்டியெழுப்பும் திட்டங்களை நாம் அறிமுகம் செய்வதுடன் அதனூடாக மாணவர்களுக்கு அதிகளவு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் எதிர்பார்க்கின்றோம் என்றார்.



டோக்கியோ சீமெந்து குழுமம் அண்மையில் இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து மினிபேயின் ஹந்தகனாவ மற்றும் உடுதும்பரவிலுள்ள மீடும்கம ஆகிய இடங்களில் இரண்டு வெற்றிகரமான மரநடுகை நிகழ்வுகளை நடாத்தியது. அரச ஊழியர்கள், விவசாய சமூகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட 600 க்கும் மேற்பட்டவர்களின் பங்குபற்றுதலுடன் மரநடுகை இடம்பெற்றது.

# நுண் மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கு கொமர்ஷல் வங்கி நடத்திய வலுவூட்டல் நிகழ்ச்சி



காலி மாவட்டத்தில் உள்ள நெலுவ பிரதேசத்தில் நுண் மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கு கொமர்ஷல் வங்கி அண்மையில் விழிப்புணர்வு செயற்திட்டம் ஒன்றை நடத்தியது. அவர்கள் தமது தொழில் முயற்சிகளை வளர்ச்சி அடையச் செய்வதற்கான அடிப்படை அறிவை ஊட்டி அவர்களை வலுவூட்டும் வகையிலேயே இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது.

வங்கியின் 'திரிசக்தி நிலைத்தன்மை தொழில்முயற்சி அபிவிருத்தி' வேலைத்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்திட்டம் நெலுவ பிரதேச செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிதி ஒழுக்கம், முதலீட்டு முறைகள், நிதி மோசடி ஆகிய விடயங்களில் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை கடன் தகவல் பணியகத்தின் கடன் அறிக்கை செயற்பாடுகள், தொழில்முயற்சியாளர்களுக்கான வங்கியின் கடன் கொடுப்பனவு அபிவிருத்தி சேவைகள் என்பன பற்றி இங்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

அந்தரதெனிய குழுமத்தின் தலைவர் டொக்டர் ஜினதாஸ வெடிங்கே பிரதான உரை நிகழ்த்தினார். இவர் இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் பொருளாளரும், மாத்தளை மாவட்ட தேயிலை தொழிற்சாலைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவரும் ஆவார். நெலுவ பிரதேச செயலாளர் ஷாந்த பிரிய தர்ஷன, காலி சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் நந்தலால் ஜயசேகர, நெலுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அசோக்க பசநாயக்க உட்பட பல முக்கிய உள்ளூர் பிரமுகர்கள், கொமர்ஷல் வங்கியின் அபிவிருத்தி கடன் பிரிவு சிரேஷ்ட முகாமையாளர் மாலிக டி சில்வா, நெலுவ கிளையின் முகாமையாளர் சுரங்க கமகே ஆகியோருடன் இந்நிகழ்வில் பங்கேற்றனர். விவசாய மற்றும் நுண்நிதி ஒருங்கிணைப்பாளர் கே.பி.என்.சமித் குமார நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தார்.

இந்நிகழ்வின் ஒரு அங்கமாக விஷேட அதிதிகள் பிரதேச செயலாளர் அலுவலக வளவில் மரக்கன்றுகளை நாட்டி வைக்குமாறு அழைக்கப்பட்டனர். காட்டு மர வகைகளைச் சேர்ந்த 250 மரக்கன்றுகள் இந்த வளவில் அதிதிகளால் நடப்பட்டன. சுற்றாடல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் வகையில் இந்த மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

# பொருளாதார பின்னணியில் சிறந்த வருடாந்தர நிதி முடிவுகளை வெளியிட்டு, Softlogic Life



பொருளாதார சவால்களை முறியடித்து, 2022 நிதியாண்டில் எழுதப்பட்ட மொத்த கட்டுப்பண வருவாயாக 23 பில்லியனை அடையும் Softloic Life

சவால்கள் நிறைந்த பொருளாதார பின்னணியில் சிறந்த வருடாந்தர நிதி முடிவுகளை வெளியிட்டு, Softlogic Life ஆனது 31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஆண்டில் 23,083 மில்லியன் எழுதப்பட்ட மொத்த கட்டுப்பண வருமானத்தை (GWP) பதிவு செய்ய முடிந்தது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும் போது 15% வளர்ச்சியாகும். கடுமையான பொருளாதார நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் போதும், Softlogic Life நிறுவனம் தனது ஆயுள் காப்புறுதி பத்திரதாரர்களுக்கு 8,264 மில்லியன் ரூபாய் உரிமைகோரலைத் தீர்ப்பதன் மூலம் துறையில் வலுவாக உள்ளது.

டிசம்பர் 31, 2021 இல் இருந்த 16.08% உடன் ஒப்பிடும்போது Softlogic Life இன் சந்தைப் பங்கு (Market Share) 16.87% ஆக அதிகரித்துள்ளது. சந்தைப் பங்கின் தொடர்ச்சியான வளர்ச்சியுடன், Softlogic Life இப்போது ஆயுள் காப்புறுதி சந்தையில் இரண்டாவது பாரிய நிறுவனமாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது, பல தசாப்தங்களாக தொழில்துறையில் உள்ள மற்றைய காப்புறுதி நிறுவனங்களை விட வலுவான வளர்ச்சி செயல்திறனை வெளிப்படுத்துகிறது. Softlogic Life ஆனது 2022 இல் 15% GWP வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்துள்ளது, இது காப்புறுதித் துறையின் மதிப்பிடப்பட்ட வருடாந்திர வளர்ச்சியான 9.6% ஆகும்.

இவை அனைத்தையும் கொண்டு, காப்புறுதித் துறையின் 10 வருட GWP கூட்டு வளர்ச்சி விகிதமான (10 Year Compound Annual Growth Rate) 14% உடன் ஒப்பிடும்போது Softlogic Life GWP கூட்டு வளர்ச்சி விகிதத்தை 28% பதிவு செய்துள்ளது. Softlogic Life இலங்கையின் காப்புறுதித் துறையின் வளர்ச்சியை அதிகரிப்பதில் நிறுவனத்தின் பங்களிப்பு அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியில் 133,872 காப்புறுதிப் பத்திரங்களை விநியோகித்ததன் மூலம் 1.5 மில்லியன் இலங்கையர்கள் ஆயுள் காப்புறுதி செய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த காலப்பகுதியில், நிறுவனத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் (PAT) 2,683 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 27% வளர்ச்சியாகும்.

வரிக்கு முந்தைய இலாபம் (PBT) கடந்த ஆண்டு 1,065 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 36% அதிகரித்துள்ளது.

விவேகமான மற்றும் திறமையான செலவு நிர்வாக முன்முயற்சிகளின் விளைவாக, 2022 இல் பணவீக்கம் அதிகரித்துள்ள போதிலும், நிறுவனத்தின் செயல்பாட்டு செலவு விகிதத்தை 22% ஆக நிறுவனம் பராமரிக்க முடிந்துள்ளது.

'செலிங்கோ லைஃப்' நிறுவனத்தினால்

# யாழ். வைத்தியசாலைக்கு மேலும் மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

செலிங்கோ லைஃப், யாழ் போதனா வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவத்திற்காக உயர் சார்பு பிரிவிற்கு 2013ம் ஆண்டு நன்கொடையளித்திருந்ததோடு, அண்மையில், சுவாசச்சிரமங்கள் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சிகிச்சைக்கான புதிய மருத்துவ உபகரணங்களைக் கையளிக்கும் முகமாக அங்கு மீள்விஜயம் செய்திருந்தது.

செலிங்கோ லைஃப், வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவப்பிரிவில் அமைந்துள்ள ர்னுரு HDU வினைப் பராமரிப்பது தொடர்பான தனது அர்ப்பணிப்பின் ஒரு பாகமாக, ரூ. 2.1 மில்லியனுக்கும் அதிக செலவினாலான 'ஒப்டிஃப்ளோ' நாசிவழி ஒட்சிசன் சிகிச்சை உபகரணம் மற்றும் இரண்டு உட்செலுத்தல் பம்புகள் என்பவற்றை வழங்கியுள்ளது.

வைத்தியசாலையின் கருத்திற்கமைய, HDU வானது அண்மைக்காலத்தில் முழுப் பயன்பாட்டில் இயங்கிவந்துள்ளது. இப்பிரிவானது, 2013ம் ஆண்டு பிரத்தியேகமாக அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, 5000ற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கியுள்ளதோடு, 2022ம் ஆண்டில் இங்கு 551 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




# செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 72 வீதத்தினால் உயர்வு



2022 ஆம் ஆண்டுக்கான செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 72 வீதத்தினால் உயர்வு மற்றும் வருமானம் உயர்வினூடாக வங்கியின் உறுதியான வளர்ச்சி மீள உறுதி செய்யப்பட்டுள்ளது

செலான் வங்கி 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டில் ரூ. 6.6 பில்லியனை வரிக்கு முந்திய இலாபமாக பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 10 வீத வளர்ச்சியாகும். இக்காலப்பகுதியில் வங்கி ரூ. 4.7 பில்லியனை வரிக்குப் பிந்திய இலாபமாகவும் பதிவு செய்திருந்தது. இதனூடாக வங்கியின் உறுதியான வினைத்திறன் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில், வங்கியின் தேறிய வட்டி வருமானம் 72 வீதம் எனும் உயர்ந்த பெறுமதியைப் பதிவு செய்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 வீத அதிகரிப்பாகும்.

தற்போதைய உறுதியற்ற சூழ்நிலையை கவனத்தில் கொண்டு, வங்கியினால் முன்னெடுக்கப்பட்டிருந்த மீட்சியுடனான மற்றும் உறுதியான செயற்பாடுகளினூடாக நாட்டின் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதுடன், 2022 ஆம் ஆண்டிலும் இலாபகரத்தன்மையை பேண முடிந்திருந்தது.

செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானத்தில் வட்டி வருமானம் மற்றும் வட்டி செலவீனம் ஆகியன பங்களிப்பைச் செலுத்தியிருந்தன. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதிகள் முறையே 84வீதம் மற்றும் 96வீத அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தன.

# மின்சார சேமிப்பின் முதல்வன் அபான்ஸ் GreenPro சூப்பர் சேமிப்பு குளிர்சாதனப் பெட்டி





வீட்டுப்பாவனை மின் உபகரணங்களுக்கு புகழ்பெற்ற பெயரான அபான்ஸ், சூழல் நட்புறவுமிக்க தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதில் என்றும் முன்னணியில் உள்ளது.

அந்த வகையில் இலங்கை சூரியசக்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட ஆற்றல் மதிப்பீட்டு தரப்படுத்தலில் 4.1 என்ற ஆற்றல் மதிப்பீட்டு தரநிலையை பதிவுசெய்ததன் மூலம், இலங்கையில் 200 லீட்டர் கொள்ளளவுக்கு குறைவான டிரெக்ட் கூல் குளிர்சாதனப் பெட்டி அணிவகுப்பின் ஆற்றல் மிக்க குளிர்சாதனப்பெட்டியாக AbansGreenPro குளிர்சாதனப்பெட்டி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

17 பெப்ரவரி 2023 அன்று இலங்கை சூரிய சக்தி அதிகாரசபை மற்றும் இலங்கை தர நிர்ணய நிறுவனம் இணைந்து நடத்திய விழாவில் இந்த மதிப்புமிக்க ஆற்றல் மதிப்பீட்டு லேபிள் வழங்கப்பட்டது.

உங்கள் இல்லத்தின் மின் பட்டியலில் 50விகித மின்சாரம் நீங்கள் பயன்படுத்தும் குளிர்சாதனப் பெட்டிக்கே செலவாகிறது. இலங்கையில் அதிகமாக மின்சாரத்தை சேமிக்கும் முன்னணி குளிர்சதானப் பெட்டிகளில் ஒன்றாக Abans GreenPro குளிர்சாதனப் பெட்டியை சுட்டிக்காட்ட முடியும்.

# யூனியன் வங்கி சவால்களுக்கு மத்தியிலும் 2022 நிதியாண்டில் வலுவான வருமான வளர்ச்சியைப் பதிவு செய்தது



2022 ஆம் ஆண்டில் யூனியன் வங்கி தொடர்ச்சியாக மீட்சியாக திகழ்ந்ததுடன் உறுதியான மூலதன நிலையைக் கொண்டிருந்ததுடன் அதிகரித்த ஒட்டுமொத்த வருமானத்தைப் பதிவு செய்து மேம்படுத்தப்பட்ட பிரதான வங்கியியல் வினைத்திறனை பதிவு செய்திருந்தது. மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் வங்கியின் மொத்த வருமானம் 73வீதத்தினால் அதிகரித்து ரூ. 18 966 மில்லியனாகப் பதிவாகியிருந்தது. கடுமையான இடர் மற்றும் மீட்சிக் கட்டமைப்பினூடாக தனது வியாபாரங்களை வங்கி நிர்வகித்திருந்தமையினூடாகவும் கவனமான முறையில் புதிய வியாபார வாய்ப்புகளைத் தெரிவு செய்திருந்தமையினூடாகவும், இந்த வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்திருந்தது.

தேறிய வட்டி வருமானம் 36.6% இனால் உயர்வடைந்து ரூ. 5 814 மில்லியனாகப் பதிவாகியிருந்தது. கடன் பிரிவு மற்றும் திறைசேரி சொத்துக்களின் மீள் விலையிடலினூடாக கிடைத்திருந்த உயர்ந்த வருமதிகள் இதில் பங்களிப்புச் செய்திருந்தது.

வங்கி துரித மூலதன போதுமை நிலையை ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை விட உயர்ந்த நிலையில் தொடர்ந்தும் பேணியிருந்தது. வங்கியின் மொத்த மூலதன விகிதம் 2022 டிசம்பர் 31ஆம் திகதியன்று 18.26வீதமாக காணப்பட்டது.

# தனது சிறந்த செயல்திறன் கொண்ட முகவர்களை கௌரவிக்கும் McLarens Lubricants

McLarens Lubricants Ltd நிறுவனமானது பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான McLarens குழுமத்தின் துணை நிறுவனமும் இலங்கையில் Mobil Lubricants தயாரிப்புகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரும் ஆகும். இந்நிறுவனம் அதன் நாடு முழுவதிலுமுள்ள பதிவுசெய்யப்பட்ட 3 000 முகவர்களில் சிறப்பாகச் செயற்பட்ட முகவர்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் அதன் வருடாந்த முகவர் விருதுகள் விழாவை அண்மையில் நடத்தியிருந்தது. 7 வெவ்வேறு பிரிவுகளின் கீழ் 74 விருதுகள் வழங்கப்பட்ட இந்த வருடாந்த நிகழ்வில், நாடளாவிய ரீதியில் சிறப்பாகச் செயற்பட்ட தெரிவு செய்யப்பட்ட பங்காளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த இந்த வருடாந்த விருது வழங்கும் விழா நிகழ்வு மற்றும் இரவு விருந்து நிகழ்வானது, நீர் கொழும்பில் உள்ள ஜெட்விங் ப்ளூ ஹோட்டலில் ஒரு இரவை கழிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

McLarens Group, குழும முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி ஷெஹாரா டி சில்வா இந்நிகழ்வில்




கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் "எமது முகவர்களுடனான வர்த்தகப் பங்காளித்துவத்தைப் பாராட்டுவதற்கும், சிறந்த செயற்திறன் மிக்க முகவர்களை அங்கீகரித்து விருது வழங்குவதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். கடுமையான பொருளாதார வீழ்ச்சி கொண்ட இந்த நேரத்திலும் கூட 2023 ஆம் ஆண்டில் எமது விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மைகளை வழங்கும் தனித்துவமான முன்னுரிமைத் திட்டங்கள் மூலம், நாடு முழுவதும் உள்ள எமது விசுவாசமான பங்குதாரர்கள் அனைவரும் தங்களது வணிகத்தில் வளர்ந்து அதனை நிலைநிறுத்த நாம் தொடர்ந்தும் ஆதரவளிப்போம்." என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 4ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.















திருகோணமலை விமானப்படைத் தளத்தில் நேற்று இடம்பெற்ற விமானப்படைக்கு தெரிவான கெடட் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு விமானப்படை வீரர்களின் மரியாதை அணிவகுப்புடன் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. 37 அதிகாரிகளும் மூன்று பெண் அதிகாரிகளும் பயிற்சி பெற்று வெளியேறியதுடன் அதிகாரிகளாகும் விமானப்படை வீரர்களுக்கு ஜனாதிபதியினால் “வாள்” வழங்கப்பட்டது.







# சர்வதேச மருத்துவ கண்காட்சி




கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் மெடிகேர்2023 எனும் பன்னிரண்டாவது சர்வதேச மருத்துவ கண்காட்சியை பிரதமர் தினேஷ் குணவர்தன தொடங்கி வைத்தார்.

இலங்கை சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் சர்வதேச அளவிலான தரத்துடன் திகழும் மருத்துவமனைகள், மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து நடைபெறும் பன்னிரண்டாவது 'மெடிகேர் 2023 தேசிய சுகாதார கண்காட்சி' கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க நினைவு கண்காட்சி கூடத்தில் மார்ச் 3, 4, 5 ஆகிய திகதிகளில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் 15,000 க்கும் மேற்பட்ட பொது மக்கள் மற்றும் தொழில் துறையில் முதலீடு செய்ய விரும்பும் பங்குதாரர்கள், மருத்துவ கல்வி பயிலும் மாணவர்கள், மருத்துவத்துறை நிபுணர்கள், சர்வதேச அளவிலான மருத்துவமனைகள், மருத்துவ சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவை பங்குபற்றுகின்றன. இந்த கண்காட்சியின் முதன்மை நோக்கம் பொதுமக்களுக்கு சரியான தருணத்தில் துல்லியமான தகவல்களை வழங்குவதுடன், மேம்படுத்தப்பட்ட நவீன மருத்துவ தொழில்நுட்பங்களையும் அளிப்பதாகும். சுகாதார சிக்கல்கள், நோய் தடுப்பு முறைகள், புதுப்பிக்கப்பட்ட மருத்துவ சாதனங்கள், சுகாதாரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய மாற்றங்கள், பயனுள்ள சிகிச்சை முறைகள்.. போன்றவற்றில் சர்வதேச அளவில் சிறந்த சேவை அளிக்கும் நிறுவனங்கள் பங்குபற்றுவதால் பொதுமக்களுக்கும் பயனளிக்கக்கூடிய கண்காட்சியாக இது திகழ்கிறது.

நிகழ்வில் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா, முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட பல அமைச்சர்களும், அரசாங்க அதிகாரிகளும், சுகாதாரத்துறை உயரதிகாரிகளும் பங்குபற்றினர். மேலும் இந்நிகழ்வில் இலங்கையில் குழந்தையின்மை பிரச்சனையால் பாதிக்கப்பட்ட நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தம்பதிகளுக்கு, நவீன சிகிச்சை மூலம் குழந்தை பேறு அளித்து அவர்களின் மகிழ்ச்சிக்கு காரணமான சென்னை பிரசாந்த் மருத்துவமனையின் நிர்வாகத் தலைவரும், மகப்பேறு மருத்துவ நிபுணருமான திருமதி கீதா ஹரிப்பிரியாவும் பங்குபற்றினார்.







